
பதிவு எண் 2041 மகாத்மா காந்தி வாழ்க. தனிப்பிரதி விலை அணா ஒன்று




| | | |
|---|---|---|
| வருட சந்தா முன் பணம் | ... | ரூ 3—0 |
| 6 மாத சந்தா ,, | ... | ரூ 1—12 |
| வெளிநாட்டிற்கு ,, | ... | ரூ 4—0 |

[வாரப்பதிப்பு]

ஆசிரியர்

ஈ. வெ. இராமசாமி நாயக்கர்

| | |
|---|---|
| வியாபாரிகள் விளம்பரம் அங் 1க்கு | அ. 12 |
| கோர்ட் விளம்பரம் அங்குலம் 1க்கு | ரூ. 2. |

☞ தனி விகிதமும் உண்டு.


மாலை 3 | ஈரோடு, பிரபவ ஹு வைகாசி-மீ 2உ (15—5—27) ஞாயிற்றுக்கிழமை. | மலர் 3.

## மின்சார ரசம்.

☞ மின்சாரரசம்.

ஒன்றே எல்லா வியாதிகளுக்கும் தேவாமிர்தம் போன்றதென உலகப்பிரசித்தி பெற்றுள்ளது. எந்த வியாதிக்கும் துளிக்கணக்கில் உபயோகித்து நிமிஷக்கணக்கில் குணம் பெறலாம். பத்தியமில்லை. அனுபானமில்லை. பால்யர் முதல் விருத்தாப்பியர் வரையில் ஸ்திரீகள் உள்பட எல்லோரும், எக்காலத்திலும் பயமின்றி இதை உபயோகிக்கலாம். பாஷாண சம்மந்தமான சரக்குகள் இதில் இல்லை.

புட்டி 1-க்கு ரூ. 2.
தபாற் சார்ஜ் வேறு.




☞ மின்சாரரசம்.

ஒரு புட்டி கையிலிருந்து விட்டால் வேறு டாக்டர்களை தேட வேண்டிய அவசியமே இராது. மனிதர்களுக்கு வரும் ஆபத்தை யார் அறிவர்? எந்தசமயம் எப்படி இருக்குமோ? ஒருவேளை ஒரு துளி மின்சாரரசமே ஒருவரை மரண அபாயத்திலிருந்து விடுவித்து விடலாம். அப்படி அநேகர் உயிர் தப்பியுமிருக்கின்றனர். ஆகவே நோயாளிகளுக்கு இது ஓர் உயிர்த் தோழன். ஒவ்வொரு குடும்பத்திற்கும் இன்றியமையா ஆபத்து நேசன். இன்றைக்கே எழுதுங்கள்.

கைகண்ட மருந்து. கேட்லாக் இனாம்.

விலாசம்:— **மின்சாரரசம் கம்பெனி லிமிடெட், சேலம். (S. I.)** தந்திவிலாசம்:— "Rasamco"

மதுரையில் இதன் முக்கிய வியாபாரிகள்:- *T. N.* சொக்கலிங்கம் பிள்ளை & சன்ஸ் இங்கிலீஷ் மருந்து ஷாப்; வியாபாரம், வடக்கு சித்திரை வீதி, மதுரை.

மலாய் நாடுகளுக்கு சோல் ஏஜண்டுகள்:— ஆர். இ. முகம்மது காசீம் & கம்பெனி, கிள்ளாங், பினாங், சிங்கப்பூர்.

# சென்னை சிவாஜி திருநாள் கொண்டாட்டத்தில்

## திரு. ராமசாமி முதலியாரின் வீர முழக்கம்.

ராஜா சாஹேப் அவர்களே! சகோதரர்களே! சிவாஜி மகாராஜ பார்ப்பனர்களை நம்பினதால்தான் மோசம் போனார். நான் சிவாஜி மகாராஜா தம்வாழ்நாளில் பார்ப்பனரல்லாதவர்களுக்கு நன்மைசெய்தார் என்று சொல்ல முடியாது. ஆனால் அவர் ஒரு பெரிய நன்மையை நம்மவர்களுக்குச் செய்திருக்கிறார்! "இதோ நான் பார்ப்பனர்களை நம்பி மோசம் போனேன்! பார்ப்பனரல்லாத மக்களே! ஜாக்கிரதையாயிருங்கள், பார்ப்பனர்களை நம்பினால் மோசம் போவீர்கள்!" என்ற ஓர் எச்சரிக்கையை, ஒரு பெரிய படிப்பினையை, நமக்கு விட்டுப்போயிருக்கிறார். இதுதான் சிவாஜி மகாராஜா நம் பார்ப்பனரல்லாத மக்களுக்குச் செய்த பெரிய நன்மையாகும். இதற்காகத்தான் நாம் அவருடைய முன்னூறுமாண்டு விழாவைக் கொண்டாட இங்கு கூடியிருக்கிறோம். இதைத்தவிர மற்றபடி தம் வாழ்நாளில் சிவாஜி மகாராஜா பார்ப்பனர்களுக்குத்தான் நன்மை புரிந்து வந்தார். பார்ப்பனர்களுக்குத்தான் பெரிய பெரிய உத்தியோகம் கொடுத்துவந்தார். பார்ப்பனர்களையேதான் ஆதரித்து வந்தார். இத்தகைய நன்மைகளெல்லாம் பார்ப்பனர்களுக்கே செய்து வந்ததினாலும், பார்ப்பனரல்லாத பெருங்குடி மக்களைப் புறக்கணித்தே வந்ததாலும் இப்பெரிய பட்சபாதமான குற்றத்தைச் செய்ததற்காக, அந்தக் கர்ம பலனைத் தகுந்தபடி அனுபவித்தார். பார்ப்பனர்களுக்கு உபகாரம் செய்தது பாம்புக்குப் பால்வார்த்தது போலாயிற்று! உபகாரம் செய்த சிவாஜி மகாராஜாவுக்குக கல்மனப் பார்ப்பனர்கள் அபகாரம் செய்தனர்.

சிவாஜி மகாராஜாவானவர் அவ்வாறு பட்சபாதமாய் நடந்துகொண்டது அவருடைய குற்றமாகாது. குழந்தைப் பருவத்திலிருந்து பார்ப்பனருடனேயே பழகி வந்ததாலும் பார்ப்பனர்களே உயர்ந்தவர்களென்று அவருக்கு ஆரம்ப முதலே உபதேசம் செய்யப்பட்டு வந்திருத்தலாலும் பார்ப்பனர்களுக்குத்தர்மமும் உபகாரம் செய்தால்தான் புண்ணியம் கிடைக்குமென்று அடிக்கடி சொல்லப்பட்டு வந்திருத்தலாலும் சிவாஜி மகாராஜா அரசானபின்னருங்கூட, பார்ப்பனக் கட்டுப்பாடுகளினின்றும் புரோகிதக்கட்டுப்பாடுகளினின்றும் விடுபடுவது மிகவும் கஷ்டமாயிருந்தது.

நமது தலைவர் கனம் பனகால் அரசர் பகவத் கீதையிலிருந்து எடுத்துச் சொல்லியது போல "நீதி அழிந்து அநீதி தலைவிரித்தாடுங்கால் துஷ்டநிக்ரக சிஷ்டபரிபாலனார்த்தம் நான் இவ்வுலகத்தில் அவதரிப்பேன்" என்றபடி நம் வீரர்கள் ஒவ்வொருவரும் அவதார புருஷர்களாய் இவ்வுலகில் தோன்றினார்கள் என்பதற்குச் சற்றும் சந்தேகமேயில்லை. இம்மூபெருந் தலைவர்களும தங்கள் வாழ்நாளிலும வாழ்நாள்களுக்குப் பின்னும் விட்டுப்போயுள்ள உணர்ச்சிகளும் கிளர்ச்சிகளும் இயக்கங்களும் அவதார புருஷர்களால் முடியத்தக்க காரியங்களேயன்றி சாதாரண மக்களால் முடியத்தக்க காரியங்களன்று.

சிவாஜி மகாராஜா பெரிய நாடுகளையெல்லாம் தன் வீரத்தினாலும் தீரத்தினாலும், போர்புரியும் ஆக்கத்தினாலும் ஜெயித்தார். அஞ்சா நெஞ்சம் படைத்த சுத்த வீரராய் விளங்கினார். அவருடைய வாழ்நாளில் அவருக்கு நிகராக போர்வீரர் யாருமே இருந்ததாகச் சொல்லமுடியாது. அப்படித் தன் திறனாலும் தன் சேனா பலத்தாலும் வென்ற நாடுகளையுங்கூடத் தான் அனுபவிக்கக்கூடாதென்று தற்காலத்திலிருப்பது போன்ற அக்காலத்துச் சட்டந்தெரிந்த புலிகளும் சட்ட நிபுணர்களும் சட்டப் பண்டிதர்களும் சொன்னார்கள். அததகைய பெரிய இராஜாங்கத்தை அனுபவிக்க சிவாஜி மகாராஜாவுக்கு யாதொரு உரிமையும் சுதந்திரமும் இல்லையென்று சொல்லப்பட்டது. உண்மையென்ன? அக்காலத்துப் பார்ப்பனர்கள்தான் இராஜாக்களுடைய யோக்கியதைகளெல்லாம் கணிக்கக்கூடிய பண்டிதர்கள். அவர்கள் சொன்னதுதான் வேத வாக்கு, அப்பார்ப்பனப் பண்டிதர்கள் என்ன சொன்னார்கள்? சிவாஜி க்ஷத்திரியரல்ல ஆதலால் அவர் அரசராகமுடியாது என்று இந்துக்களின் குருக்களாகிய பார்ப்பனப் பண்டிதர்கள் சொன்னார்கள்! பார்ப்பனர்களால் ஏற்றுக்கொள்ள முடியாவிட்டால் பார்ப்பனர்களால் பட்டாபிஷேகம் முதலிய சடங்குகள் நடத்தப்பெறாமல் போனால் தான் ராஜாவுக்குத்தகுந்த கண்ணியம் வாய்க்கப்பெற முடியாது என்று சிவாஜிமகாராஜா நம்பினார். தான் எப்படியும் ஒரு அரசராகக் கருதப்படவேண்டும். அதிகாரமிருக்கிறது, பெரிய ராஜ்யமிருக்கிறது. ஆனால் மகாராஜா என்ற பெயரில்லை. பார்ப்பனப் பண்டிதர்கள் தன்னை க்ஷத்திரியன் என்று கூப்பிட மறுக்கிறார்கள். அக்காலத்தில் பார்ப்பனர்களிடமிருந்து பட்டம் பெறுவது அவ்வளவு கஷ்டமாகவும் அவ்வளவு பெருமையானதாகவும் கருதப்பட்டு வந்தது! சிவாஜி மகாராஜாவும் அத்தகைய பெயருக்காக என்ன வேண்டுமானாலும் செய்யத்தயாராயிருந்தார்.

### $1\frac{1}{2}$ கோடி தட்சணை!

பம்பாய் மாகாணத்துப் பிராமணர்களெல்லாம் ஒரே கட்டுப்பாடாக சிவாஜிக்கு க்ஷத்திரிய பட்டம் கொடுக்க மறுத்துவிடவே, சிவாஜி இந்தியாயின் வேறு இடங்களிலுள்ள பிராமணர்களை வரவழைக்க ஆரம்பித்தார்கள். வடக்கே ராஜ புத்திர அரசர்களைப்போன்று தானும் ஒரு க்ஷத்திரியராக ஏற்றுக்கொள்ளப்பட்டு அரசர் பட்டம் கிடைக்கப் பெற்றுவிட வேண்டுமென்ற எண்ணத்தாலும் ஆசையாலும் தூண்டப்பட்ட சிவாஜி காசியிலிருந்து பிராமண பண்டிதர்களை அழைத்துக்கொண்டு வந்தார். காசியிலுள்ள பிராமண பண்டிதர்கள் சொல்லிவிட்டால், பமபாய்ப் பார்ப்பனப் பண்டிதர்களுக்கு வாயடைபட்டு விடும்! ஏனென்றால் அக்காலத்தில் காசிப் பிராமணர்கள் தான் மகா பண்டிதர்கள் என்று கருதப்பட்டு வந்தார்கள். பட்டாபிஷேக வைபவம் நடந்தேறவும், க்ஷத்திரியப்பட்டம் பெறவும் அந்தோ! சிவாஜி மகாராஜா ஒன்றரை கோடி ரூபாய் செலவிட வேண்டியதாயிற்று! இல்லாவிட்டால் "க்ஷத்திரிய"ப்பட்டம் வரமறுக்கிறது! இந்த வைபவத்திற்கு ஈஸ்டு இந்தியா கம்பெனியின் பிரதிநிதியொருவரும் வந்திருந்தார். அவ்வெள்ளைக்கார சரித்திர ஆசிரியர் இப்பட்டாபிஷேக விருத்தாந்தங்களையெல்லாம் பற்றி எழுதியுள்ளார். சிவாஜி சரித்திரத்தை நான் எழுதவில்லை! (நகைப்பு) வேறு எந்த ஜஸ்டிஸ் கட்சியினரும் எழுதவில்லை! (நகைப்பு) அப் பட்டாபிஷேகத்தில் நடந்த சடங்குகளும் பார்ப்பனரின் கொடுமைகளும், பார்ப்பனரின் கேவலமான நடத்தைகளும், சிவாஜி மகாராஜா என்னென்ன சில்லரைச் சடங்குகளுக்கெல்லாம் உட்படுத்தப்பட்டார் என்பதும் மனிதத்தன்மைக்கு ஒவ்வாத கோட்பாடுகளும் இவையெல்லாம் சரித்திரத்தில் காணப்பெறுவனவேயன்றி வேறில்லை. கடைசியில் ஒரு பெரிய தராசைக்கொண்டுவந்து, ஒரு தட்டில் சிவாஜி மகாராஜாவை உட்காரவைத்தும், மற்றொரு தட்டில் கலப்படமில்லாத தங்கத்தை சிவாஜியின் நிறைக்குச் சமமாக நிரப்பினார்கள்! சகோதரர்களே! அற்ப சொற்பமானவரன்று! எவர் எவ்வளவு வீரம் பொருந்தியிருந்தாரோ அதற்கேற்ப புஜபலபராக்கிரமம் பொருந்தியவராய் ஆஜானுபாகுவாய் விளங்கியிருந்தார்! அவர் 140 பவுண்டு நிறையுடையவராயிருந்தார்! பிராமணர்களின் அதிர்ஷ்டத்தை என்னென்பேன்! 140 பவுண்டு நிறையுள்ள பசும் பொன்னைப் பார்ப்பனர்கள் தட்சணையாகப் பெற்றார்கள்! இதனாலும் இன்னும் மற்றையசில்லரை தட்சணைகளாலும் சிவாஜி மகாராஜாவின் பொக்கிஷம் காலியாய்ப் போய்விட்டது! தான் எவ்வளவோ பிரயாசப்பட்டு பல வருடங்களாய்த் திரட்டி சம்பாதித்த பணத்தையெல்லாம சகோதரர்களே, பார்ப்பனரிடமிருந்து க்ஷத்திரியப் பட்டம் பெறுவதற்காக வேண்டி விரயம் செய்துவிட்டார்! இத்துடன் அடங்கிற்றா நம் பிராமண நண்பர்களிற் சிவாஜி வேட்டை.

### இறந்துபோனவர்களுக்காக தட்சணை.

சிவாஜி அநேக நகரங்களையும் கிராமங்களையும் இராஜ்ஜியங்களையும் கைபற்றிய போது எவ்வளவோ கொள்ளைகளும் கொலைகளும் நடந்தனவாம். அநேகமாயிரம்பேர் உயிர்களையும் இழந்தார்களாம். சொத்து சுதந்திரங்களையும் இழந்தார்களாம். ஆனால் சிவாஜி மகாராஜா ஒரு பெரும் பாவத்தைச் செய்தவராகிவிட்டாராம். அப்பாவத்தையெல்லாம் நீக்க வேண்டுமென்று பார்ப்பனர்கள் சிவாஜி மகாராஜாவுக்குச் சொன்னார்கள். சிவாஜி அது உண்மைதானென்றும், போரில் அநேக உயிர்கள் சேதமாவதும் சொத்துகள் அழிவதும் இயற்கை தானென்றும் அதற்காகத்தான் நஷ்டமடைந்த குடும்பங்களுக்கு நஷ்ட ஈடு கொடுக்கத்தயாராயிருப்பதாகவும், அதற்கு வேண்டும் அவ்வளவையும் அக் குடும்பங்களுக்குக் கொடுத்துவிடலாம் என்று சொன்னார். அப்பொழுது சிவாஜியின் பாவத்தைப் போக்க

(15ம் பக்கம் பார்க்க.)

## “சங்கராசார்ய சுவாமிகளும்” மலையாளமும்.

கைவல்ய சாமியார் எழுதுவது

ஆதி சங்கராசார்ய சுவாமிகள் மலையாளத்தில் நம்பூதரி என்னும் மலையாள பிராமண ஜாதியிற் பிறந்தவர். அவர் ஏற்படுத்தின மடத்தில் இரண்டு மடத்துச் சாமிகள் இப்பொழுது மலையாளத்தில் சஞ்சாரஞ் செய்கிறார்கள். இவர்களைப் பற்றிச் சிறிது தெரிவோம். ஆதி சங்கரர் சிலமடங்களை ஏற்படுத்தினார். யோக்கியதையுடைய உத்தமர்களைச் சந்நியாசிகளாக்கி அந்த மடங்களில் நியமித்து மத விஷயங்களை ஜனசமூகத்திற்குப் போதிக்கும்படியாய் ஏற்பாடுசெய்து சொர்க்கத்தையடைந்தார். அதற்குப்பின் வரிசைக்கிரமமாக ஒவ்வொரு மடத்துச் சந்நியாசிகளும் ஒவ்வொரு பையனை ஸ்வீகாரமெடுத்துச் சந்நியாசி ஆக்கிவிட்டு காலமாவார்கள். இவர்களுடைய குணவிசேடங்களும், அனுபோகங்களும், எப்படியிருந்தாலும் ஆதி சங்கரருடைய ஸ்தானத்திலிருப்பவர்களென மதித்து, எல்லா மரியாதைகளுக்கும் உரியவர்களாயிருப்பார்கள். பணக்காரன் வீட்டிற்குப் பங்காளிகள் ஸ்வீகாரம் கொடுப்பதற்கு முந்துவதுபோல் மடத்திற்குப் பிள்ளையைக் கொடுப்பதிலும் போட்டியுண்டு; தந்திரமுண்டு. செல்வாக்குண்டு. மந்திரியும் மற்ற பதவிகளும் வந்தவுடன் அவர்கள் கூட்டமும் கட்சியும் பதவிக்கு ஓடி புகழ்ந்து திரிவது போல் ஸ்வீகாரப்பிள்ளையினுடைய பந்துக்கூட்டங்கள் மடத்திலுள்ள அதிகாரங்களையும் சுகங்களையு மடையவந்து சேர்ந்துகொள்ளுவார்கள். ஸ்வீகாரப்பிள்ளையான சங்கராச்சாரி சமஸ்கிருத பாஷையைப் படித்து வேதம் படித்து பாராயணஞ்செய்வார். ரிக் வேதமான முதல் வேதம், ஸ்தோத்திரங்களாலே நிறையப் பெற்றது. இரண்டாவது வேதமான யஜுர் வேதம் யாக சம்பந்தமான மந்திரங்களையுடையது. மூன்றும் வேதமான சாமவேதம் யாக காலத்தில் கானம் பண்ண வேண்டிய விதிகளும் சோமயாகத்தில் கானத்திற்கு அவசியமான சுலோகங்களுமுடையது. நாலாம்வேதமான அதர்வண வேதம் மற்றமூன்றிலுள்ள மந்திரங்களும் யோக சித்திக்கு வேண்டிய மந்திரங்களும் அடங்கியிருக்கும். இந்தக்காலத்தில் இவையனைத்தையும் பாடஞ் செய்வதில்லை. அவசியமுமில்லை. ஏனெனில், யாகக் கிருத்தியங்களை இந்த காலத்தில் செய்வதில்லை. சங்கரபாஷியத்தை ஒருவாறு பார்த்தும் ஆங்காங்குச் சில சுலோகங்களைப் பாடங் கேட்பார்கள். பழைய வைதீகப்படிப்பாயிருக்குமே ஒழிய அனுபோகத்திற்கு உபயோகப்படும்படியான ஆராய்ச்சிக்குத் தகுந்த மாதிரியில் கற்றுக்கொடுப்பதில்லை இவர்களைச் சுற்றியும் வைதீகக் கோஷ்டிகளிருந்துகொண்டு அவர்களுடைய குறுகின சுபாவங்களையும் மதத்துவேஷங்களையும் ஜாதி கீழ்மேலுமே கற்பிப்பார்கள். உலகத்தில் நடக்கும் சங்கதி இவர்கட்குத் தெரியாது. குருவான சங்கரர் எதற்காக அவதாரம் பண்ணினார்? என்பதை இவர்கள் கவனிப்பதில்லை. மலஜல உபாதை நீக்குதல்; குளித்தல்; சில மந்திரங்களைச்சொல்லி ஜெபித்தல்; பூசை செய்தல்; பாதகாணிக்கையும் தட்சணையும் கொண்டு வருகிறவர்கள் பூசையையும் மரியாதையும் பெற்றுக்கொள்ளுதல்; பிரசாதங்கொடுத்தல்; உண்ணல்; படுத்தல்; அத்துவைத கொள்கையின் சுலோகங்களைச் சொல்லி அர்த்தஞ் செய்வது; பின் எந்த ஊருக்குக்காரியஸ்தர்கள் புறப்படச்சொல்லுகிறார்களோ அந்த ஊருக்குப் புறப்படுவது; இதுவே இவர்கள்நிலை. பண்டுகாலத்தில் இந்து மதத்தை அடிப்படையாகக் கொண்ட மதங்களே இருந்தமையால் சங்கருடைய வேதாந்த மதத்திற்கு அடங்கி விட்டது. உலக தத்துவமான ஆராய்ச்சிகள் அந்தக் காலத்தில் இவ்வளவு பரவவில்லை சுவாமி விவேகானந்தர் இந்துமதத்தின் கொள்கைகளை உலக இயற்கைத் தத்துவங்களுக்கு ஒத்து பிரசங்கஞ் செய்தபடியால் மேனாட்டு தத்துவ ஆராய்ச்சிக்காரர்களும் நம்மதத்திற்குச் செவிசாய்த்தார்கள். மனிதனுடைய புத்தி எவ்வளவுதூர மெட்டுமோ, அதற்கு மேலும் சங்கரருடைய தத்துவ ஆராய்ச்சி சென்றிருக்கிறது. இந்த இடத்தில் அவர் அவதார புருடரே. இவர் நம்பூதரி பிராமணனானால் காசிக்குப் போயுங்கூட தீண்டாமை இவரைவிட்டு விடவில்லை. காசி விஸ்வநாதரே பறையனென்று சொல்லப்படுபவராக வந்து தீண்டாமை இவரை விட்டொழியவ உபதேசஞ் செய்தார், என்பது இவர் சரித்திரத்திலொன்று. சங்கரருடைய அபாரபுத்திவன்மையும், இராமநுஜருடைய மோட்ச துவாரத்தை பிராமணனுக்கும் பறையனென்று சொல்லப்படுபவனும் திரியக்கு ஜாதிக்கும் பேதமின்றி திறந்து விட்ட கருணாகரமென்னும் அன்பும் நம்தேசத்தைப் பிரகாசிக்கச் செய்து கொண்டிருக்கிறது என்பதும் சத்தியம்.

செல்வத்திலே பிறந்து, செல்வத்திலே வளர்ந்து, வயிறு பிழைக்கும் பந்து கூட்டத்தினால் சூழப்பட்டு “அப்பா, சாமி, அய்யா, துரையே, எஜமான்,” என்னும் பேரையே காதில் கேட்டுவளர்ந்த பிறபு வீட்டுப் பிள்ளைகளுக்கு உலக புத்தியும் குடும்பலாபநஷ்டமுமெப்படித்தெரியாதோ அதுபோலவே இவர்கட்கும் தங்கள் மதத்தினுடைய சீர்கேடும் காரியஸ்தர்களுடைய ஞாயமில்லாத ஏற்பாடுந்தெரியாது. குரு பிறந்த இடமான மலையாளத்தில்தான் இந்து மதத்தின் நாசத்திற்குப் பாலக்கால் போட்டு வருமிடம். நான் சொல்லுவது சிலருக்கு வருத்தமாகவும் துவேஷ வார்த்தையாகவுமிருக்லாம். மாப்பிளைமார் கலகத்தில் இதன் உண்மை சிலருக்குத் தெரிந்திருக்கும். இதே நிலைமையில் தீண்டாமை இருக்குமானால் நான் சொல்லுவதின் உண்மையை நமது பின்னோர்கள் அனுபோகத்தில் தெரிவார்கள். மலையாளத்தைப்பற்றி விரிவாக இன்னொரு சமயமெழுதுவோம். மலையாளத்து பிராமணனுக்கு நம்பூதரி என்று பெயர். குடும்பத்தில் பெரியவனுக்கே விவாகம் மற்ற சகோதரர்கள் நாயர் ஜாதிப் பெண்களை வைப்பாக வைத்துக் கொள்ள வேண்டியது. இதை வைப்பாட்டி என்று சொல்லுவதில்லை. சம்பந்தமென்று சொல்லுவார்கள். தமிழ் நாட்டுப் பிராமணரும் அங்குக் குடியேறி பிராமணன் என்னும் பாத்தியதையால் நாயர் ஜாதிப் பெண்களைச் சம்பந்தம் வைத்துக் கொண்டிருக்கிறார்கள். ராஜகுடும்பங்களில் நம்பூதரியும் சில பெரிய குடும்பங்களில் பிராமணனும், தவிர சம்பந்தம் செய்யக்கூடாது என்று நிச்சயமாயிருக்கிறது. நம்பூதரி பிராமணர்களாலும் தென்தேசத்துப் பிராமணர்களாலும் மலையாளத்தில் அநேக ஞாயமில்லாத யேற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. இவர்களுடைய விபசாரத்திற்கு மலையாளம் கடவுளாலேயே, சிருஷ்டிக்கப்பட்டதாகக் கருதப்பட்டு வருகிறது. இவர்கள் விபசாரத்தால் ஏற்பட்ட சில கூட்டத்தைத் தங்களுக்குக் கீழ் தனிச்சாதியாக ஏற்படுத்தியும் வைத்திருக்கிறார்கள். மதம், கடவுள், இதற்கும் பிராமணனுக்குமே, சம்பந்தம் என்னும் பிரமையோ ஜனங்கள் இந்த அக்கிரமத்தைத் திருப்தியோடு கைக்கொள்ள காரணம். இங்கிலீஷ் படிப்பு அதிகம் பரவிவருவதால் அக்கிரமங்களுக்குத் தடைகள் ஏற்பட்டு வருகிறது. மலையாளத்தில் பிராமணன் நாயர் ஸ்திரீயை ‘சூத்திரச்சி’ என்பதும் நாயர் தங்களைச் சூத்திரன் என்று சொல்லிக்கொள்ளுவதிலும் பெருமையடைகிறார்கள். இங்கு பிராமணன் முன்னமேயே ஏற்படுத்தி வைத்திருக்கும் புரட்டு மிகவும் கொடுமையானது. அதாவது பிராமணனுக்குப் பிறக்கும் குழந்தைகளை இவன் காப்பாற்றவேண்டுவதில்லை. அவசியமுமில்லை. குழந்தையின் மாமன் காப்பாற்றவேண்டும். தகப்பன் சொத்தில் குழந்தைக்கு யாதொரு பாத்தியதையுமில்லை. இப்படியே சாஸ்திரத்திலும் எழுதி வைத்தார்கள். அந்தச்சாஸ்திரத்தை அனுசரித்தே பிராமணனுடைய வைப்பாட்டி மகனுக்குத் தகப்பன் சொத்தில் யாதொரு பாத்தியதையும் இல்லை என்று இங்கிலீஷ் சட்டமும் செய்யப்பட்டிருக்கிறது. இந்தப் புரட்டுச் செவ்வையாக நடக்கவே, மலையாளத்தில் மருமக்கத்தாயம் ஏற்படுத்தினது. அதாவது சொத்துக்குப் பாத்தியதை மருமகன். வேத சாஸ்திரங்களில், “பிராமணனால் சூத்திர ஸ்திரீயிடம் பிறந்த குழந்தையின் சந்ததி உலகத்திலுள்ள வரையிலும் உண்டுபண்ணின பிராமணனும் அவன் சந்ததிகளும் முன்னோர்களும் நரகத்தில் கிடப்பார்கள்” என்கிறது. இதை நிச்சயம் பண்ண அநேக கதைகளும் சொல்லப்படுகின்றன. கோவிந்தாச்சாரி என்னும் பிராமணனால் சூத்திரஸ்திரீயிடம் பிறந்தவர் பர்த்ருஹரி. கோவிந்தாச்சாரி சாகுந்தருவாயில் பர்த்ருஹரியான மகனிடம், “நீ சந்ததியை உண்டு பண்ணக் கூடாது. உண்டு பண்ணினால் நானும் என் முன்னோர்களும் நரகத்தில் கிடப்போம் நீ விவாகம் செய்யப்படாது”. என்னும் வாக்குறுதியை வாங்கி இறந்தார். அதுபிரகாரம் பர்த்ருஹரி விவாகஞ் செய்யாமல் வைராக்கிய சதகம், சிங்கார சதகம், நீதி சதகம் என்னும் நூலைச்செய்து ஞானத்தையடைந்தார் என்பது கதை. இந்த மாதிரி அநேக கதைகளும் அதற்குத்தகுந்த நூல்களுமிருக்கின்றன. எந்த பிராமணன் அந்நிய ஸ்திரீ சம்சர்க்கம் வைத்துக் கொண்டிருக்கிறானோ அவன் சண்டாளனாகிறான்; என்பது சாஸ்திர விதி. சாஸ்திரமே பிராமணன் உயர்ந்தவன் என்பதற்குப் பிரமாணம் அந்தச்சாஸ்திரப் பிரகாரம் பார்க்கையில் மலையாளத்தில் பிராமணன் என்று சொல்லத்தக்கவன் எவன் இருக்கிறான்? சாஸ்திர சம்மதமான சண்டாளரிருக்கும் வீதியில் சாஸ்திரம் சம்மதிக்காத-சண்டாளத் தன்மையற்ற ஈழுவர் தீயர் என்னும் மலையாளத்திலுள்ள ஒரு பெரும் வகுப்பார்களும் மற்றுமுள்ள தாழ்ந்த ஜாதியர் என்பவர்களும் போகக்கூடாதாம். அநேக மலையாளத்துப் பார்ப்பனர்கள் பம்பாய், கல்கத்தா, ரங்கூன், பினாங்கு முதலிய இடங்களில் பல தொழில் செய்து பிழைக்கிறார்கள். இவர்கள் செய்யும் தொழிலெல்லாம் பிராமணன் செய்வானானால் சண்டாளத்தன்மை அடைவான் என்று பிராமணனுக்கு எந்தச்சாஸ்திரம் பெரிதோ அந்த சாஸ்திரத்தில் சொல்லியிருக்கிறது. சங்கரன்; மாதவன்; வேலன்; கிருஷ்ணன்; அச்சுதன் என்னும் நம்மதப் பெயர்களை வைத்துக் கொண்டு நம்மதத்தையே அனுசரித்துப் பிராமணனையே, குருவாக நினைத்து வருகிறவர்களை வீதியில் விடுவதில்லை. கோயில் மதிலைத்தொடப்படாது என்று ஓட்டுகிறார்கள். அவன் அன்னியமதத்திற் சேர்ந்து பெயரை மாற்றிக்கொண்டால் வீதியில் வரலாம். கோவிலுக்குள் வரலாம். இதை நினைக்கையில் இந்து மதத்திற்கும் குருவான சங்கராச்சாரிக்கும் என்ன பெருமையிருக்கிறது? “சங்கராச்சாரி வந்தார். மழை பெய்தது. அவர் வந்ததே அந்த ஊருக்குப் பாக்கியம்” என்று பார்ப்பனப்பத்திரிகைகள் எழுதி ஜனங்களை இன்னமும் ஏமாற்றுகிறதே ஒழிய, அவர் இருந்த ஊரில் பெய்தமழை அவர் போகாத ஊரிலும் பெய்திருக்கிறது. இவர் வந்து போன ஊரில் குடிக்கக்கூடத் தண்ணீரில்லையே

(இதன் தொடர்ச்சி 14-ம் பக்கம் பார்க்க.)

# மாயவரம்

# மகாநாடுகள்.

## பார்ப்பனரல்லாதார் மகாநாட்டு வரவேற்பு அக்கிராசனர் ஸ்ரீமான் ரெ. சின்னையா பிள்ளை அவர்கள் செய்த வரவேற்பு உபந்நியாசம்.

அன்பர்பணி செய்யவென்னை ஆளாக்கி விட்டு [விட்டால்
இன்பநிலை தானேவந் தெய்தும் பராபரமே,

சகோதரிகளே! சகோதரர்களே!!

தங்களுடைய வேண்டுகோளுக் கிணங்கி இங்கு விஜயம் செய்திருக்கும் மாபெரும் தலைவர்களுக்கும், பிரதிநிதிகளுக்கும், மகாஜனங்களுக்கும், தஞ்சை ஜில்லா மகாநாட்டு வரவேற்புக் கழகத்தாரின் சார்பாக என் மனமார்ந்த வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

உங்கள் வரவு நல்வரவாகுக!

உங்கள் வரவு, எங்கள் ஜில்லா வாசிகளுக்குப் புத்துயிரையும், புதிய உணர்ச்சியையும், சுய மரியாதை விருப்பத்தையும் உண்டாக்கிவிடுமென்பதை பெருமையுடன் உரைக்கின்றேன். பொதுநல சேவையே கடமையாகக் கொண்ட உங்கள் விஜயத்திற்கு எங்கள் சிற்றறிவால் செய்திருக்கும் ஏற்பாடுகளிலுள்ள குற்றங்குறைகளைப் பொறுத்துக் கொள்ளுமாறு வேண்டுகிறேன்.

சோழநாட்டின் திலகமாகிய இம்மயூர நகரமானது நீர் வளம், நிலவளம் பொருந்தி நாகரீகத்திலும், செல்வத்திலும், சிறந்து கங்கையினும் போற்றற்குரிய காவிரிநதியின் இரு கரத்திலும கீர்த்தியுடன் வீற்றிருக்கின்றன.

இந் நகரமானது பூஸ்திதியையுடைய வள்ளலார்கோவில் தருமபுரம் என்னும் பழமையான சிவஸ்தலத்தையும், திரு இந்தளூர் என்னும் வைணவத் திருப்பதியையும், நெய்தற்றொழிலில் சிறந்து விளங்கும்கூறைநாடென்னும் காரணப்பெயர் வாய்ந்த சிற்றூரையும், மற்றும் பல கிரிஸ்துவ முஹமதிய கோவில்களையும் திரண்ட ஐவேஜியையுடைய சைவ மடாலயங்களையும், தருமஸ்தாபனங்களையும்தன் எல்லைக்குள் அடக்கிக் கொண்டிருக்குமாயின், இதன் பெருமையை யார்தான் அளவிட்டுக்கூற முடியும்? இத்தகைய நகரத்தின்கண் கூடும் நமது பார்ப்பனரல்லாதார் மஹாநாட்டின் சிறப்பை நான் எவ்வாறு புகழ்ந்துரைப்பேன்.

### நமது இயக்கம்.

பொதுநல உழைப்பாளிகளே!

நமது இயக்கம், சகோதரத்துவத்தையும், சமத்துவத்தையும், சுய மரியாதையையும், சுதந்தரத்தையும் அளிக்கவல்லது. ஆனால் சிலர் தங்கள் மனச்சாட்சிக்கு விரோதமாகவோ, உண்மை உணராமலோ நமது இயக்கத்தை பிராமண துவேஷக் கட்சியென்றும், நாஸ்திகக் கொள்கையுடைய தென்றும், கூறுகின்றார்கள். சில சுயநலப் பத்திரிகைகளும் கண்டித்துத் திரிகின்றன. அவர்களைப் பற்றி நாம் கவலைகொள்ளவேண்டுவதில்லை. சூழ்ச்சிக்காரர்களின் மாயாவலையில் அகப்பட்டுழலும் நமது பார்ப்பனரல்லாதார்கள் நிலைமையைக் கண்டுதான் நாம் பெரிதும் வருந்துகின்றோம். அத்தகையவர்களுக்கு நல்லுணர்வையும், சுயமரியாதை யுணர்ச்சியையும் அளிக்குமாறு எல்லாம் வல்ல இறைவனை இப் பரிசுத்தமான மேடையிலிருந்து இறைஞ்சுகின்றேன்.

எம் போன்றார் பலர் சில காலங்களுக்கு முன்னர் பார்ப்பனர்களுடன் சேர்ந்து கொண்டு நமது இயக்கத்தை எதிர்த்ததாக எண்ணக்கூடும். நாங்கள் அப்படி ஒருக்காலமும் இவ்வியக்கத்தின் கொள்கைகளை எதிர்த்ததேயில்லை. ஆனால் நம்மியக்கத்தின் மேலான கொள்கைகளைத் தந்தவாறு கையாளாமையால் தான் நாங்கள் பிரிந்து நின்றோம். இப்பொழுது பார்ப்பனரல்லாதாரியக்கம் தனது பரிசுத்தமான நிலைமையைக்காட்ட முன் வந்திருப்பதால் நாங்கள் ஒத்துழைக்க வந்திருக்கின்றோம். சுயமரியாதைக்கும் அரசியல் சமூக சீர்திருத்தத்திற்கும் அவாக் கொள்ளும் ஒவ்வொரு பார்ப்பனரல்லாதாரும் இவ்வியக்கத்தில் சேர்ந்துழைக்குமாறு வேண்டுகிறேன்.

### சுயமரியாதை.

சுயமரியாதை வீரர்களே!

"மயிர்நீப்பின் வாழாக் கவரிமா அன்னார்
உயிர்நீப்பர் மானம் வரின்."

என்பது பண்டைத் தமிழ் வீரர்களின் கொள்கை. சுயமரியாதை யென்பதும், மானமென்பதும் ஒன்றே. ஆகவே, சுயமரியாதை யற்ற மனிதர்கள் இருப்பதைவிட இறப்பதே மேலானதாகும். பல்லாயிரம் ஆண்டுகளாக நாம் பார்ப்பனர்களின் வஞ்சக வலையிலகப்பட்டுச் சுயமரியாதை இழந்து, வாடிக்கிடக்கின்றோம். நமது பழந்தமிழ்க் குடியிற் பிறந்த அரசர்களாலும், செல்வர்களாலும் கட்டப்பெற்ற கோயில்களுக்குச் சென்றால் அங்கு நமக்குச் சுயமரியாதையில்லை. நம்மையெல்லாம் பெற்ற பிதாவாகிய ஆண்டவன் சந்நிதானத்திற் சிலர் போகக் கூடாதாம்! சிலர் போனாலும் ஆண்டவன் சமீபத்திற் சென்று வணங்கக் கூடாதாம்! சிலர் சமீபத்திற் சென்றாலும் ஆண்டவனுக்குத்தானே பூஜை செய்து வணங்கக் கூடாதாம்! இம்முறைகளெல்லாம் ஆண்டவனாலா ஏற்படுத்தப்பட்டது? நம்மைக் குழியிற்றள்ளி வைத்திருக்கும் ஒரு வஞ்சகக் கூட்டத்தாரின் தந்திரத்தாலேயே ஏற்பட்டதாகும்.

இன்னும் நாம் நமது குடும்பங்களில் நன்மை தீமைகளை நடத்தும முறைகளை யறியாமல் பல அர்த்தமற்ற சடங்குகளுக்காக நமது பொருளைச் செலவு செய்து ஏமாறுகிறோம். அப்பொருளையும், நம்மைத் தாழ்த்திவைக்கும் ஒரு கூட்டத்தார்க்குக் கொடுத்து நமது சுய மரியாதையை இழக்கின்றோம். நமது நாட்டுப் புராதனமான கோயில்களுக்கும், மடங்களுக்கும நம் முன்னோர்களால் சேமித்து வைத்திருக்கும் பொருள்கள் ஏராளமாக இருக்கின்றன. அப்பொருளை அவற்றின் தற்கால தலைவர்களிற் பலர், தங்கள் பொறுப்பையும், கடமையையும் உணராமல் வீண் வழிகளிற் செலவு செய்து மதத்திற்கும், சமூகத்திற்கும் பெருந்தீமையை உண்டாக்குகின்றார்கள். இத்தகையவர்களை நல்வழிப்படுத்தவும், அற நிலயங்களின் பொருள்களைக் காப்பாற்றவும் ஏற்பட்ட அற நிலையப் பாதுகாப்புச் சட்டத்தை, தேசமக்கள் அனைவரும் போற்றுகின்றார்கள். அதனை நிறைவேற்றிய நமது வீரரும், தலைவருமாகிய கனம், பனகாலரசரின் புகழ் என்றென்றும் அழியாது. நிலை நிற்பதொன்றல்லவா? இச்சட்டத்தால் பார்ப்பனர்கள் தங்கள் வயிற்றுப் பிழைப்புக்கும், சுய நலத்திற்கும் இடையூறு நேர்ந்து விட்டதே என்று வருந்துகின்றார்கள். மற்றும், மனிதர்க்கு மனிதர் அடிமைத்தனமிருப்பதை அகற்றவும், எல்லா மக்களும் சம உரிமையுடன் அநுபவிக்கக் கூடிய சுயராஜ்யத்தைப் பெறவும், நமது கட்சி பாடுபடுகின்றதென்பதை நாமனைவரும் உணர்ந்திருக்கின்றோம். இவற்றிற் கெல்லாம் காரணமாகவிருந்த, காலஞ்சென்ற, நமது மாபெருந் தலைவர்களாகிய சர். தியாகராயர், டாக்டர், நாயர் இவர்களுக்கு நாம எத்தகைய நன்றியைச் செய்யப் போகின்றோம். அவர்கள் கொள்கைகளை உலக முழுவதும் பரவச் செய்து, எல்லா மக்களையும் இன்ப வாழ்வு வாழச் செய்வதே நமது கடமையாகும். இதுவே நாம் அவர்களுக்குச் செய்யும் கைமமாறாகும். நாம் அப்பெரியார்களின் வழிகளைப் பின்பற்றி நடப்போமாக.

### நமது கடமை.

நம்மக்களின் சுய மரியாதையை முதன்மையாகக் காப்பாற்றக் கூடிய கதர், தீண்டாமை யொழித்தல், மது விலக்கு இம்மூன்றையும் மகாத்மா காந்தியடிகள் காங்கிரஸின் முக்கியமான திட்டங்களாகியதால் காங்கிரஸினிடத்தில் பொது மக்களுக்கு நம்பிக்கையும் மதிப்பும உண்டாகின.

மகாத்மா காந்தியடிகள் சிறை புகுந்த பின்னர், சுயராஜ்ஜியக் கட்சியார் மேற்படி திட்டங்களை நாளடைவில் நழுவ விட்டு, பேச்சளவில் வைத்துக்கொண்டு சொல் ஒன்றும் செய்கை ஒன்றுமாக மாறிவிட்டதால்காங்கிரஸினிடத்தில் பொது மக்களுக்கிருந்த மதிப்பும் நம்பிக்கையும் இழந்து விட்டார்கள்.

நமதியக்கத்தில் கதர், தீண்டாமை ஒழித்தல், மதுவிலக்கு இம்மூன்றையும் முதன்மையான திட்டமாக வைத்துக்கொண்டிருக்கின்றோம். நமது கட்சி தோன்றிய காலமுதல் தீண்டாமையை ஒழிக்கப் பாடுபட்டுக் கொண்டு வருகிறோம். நமது கட்சியில் பெரும்பாலோர் எப்பொழுது கதர் கட்டுகின்றார்கள்? கதர் கட்டாத சில தலைவர்களும், பிரதிநிதிகளும் இன்றுமுதல் கதர் கட்டுவதாக இம்மேடை மீதிலேயே தங்களுக்குள் தாங்களே தீர்மானஞ் செய்துக் கொளள வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். ஏழை தொழிலாளர்களின் துன்பத்திலும், வறுமையிலும் அனுதாபமுள்ள ஒவ்வொருவரும் கதர், தீண்டாமை ஒழித்தல், மதுவிலக்கு இம்மூன்றிற்கும் இடைவிடாது உழைக்கவேணுமென்று தெரிவித்துக் கொள்ளுகிறேன் இவைகளை

இதன் தொடர்ச்சி 13-ம் பக்கம் பார்க்க.

# தஞ்சை ஜில்லா

## பார்ப்பனரல்லாதாரின் 6-வது மகாநாடு வைபவம்.

தஞ்சை ஜில்லா மகாநாடானது மாயவரத்தில் இம்மாதம் 7, 8 தேதிகளில் வெகு சிறப்பாக வெற்றியுடன் நடைபெற்றது. மகாநாடு ஜில்லா மகாநாடாயிருந்தபோதிலும் கூட அதற்காகச் செய்யப்பட்ட ஏற்பாடுகளும் அது நடைபெற்ற விமரிசையும் தன்மையும் அதற்குவந்த பிரதிநிதிகளும் பெரிய காங்கிரஸ் கூட்டத்துக்குச் சமானமாக இருந்ததென்றே சொல்ல வேண்டும். தமிழ் நாட்டில் அரசியலின்பெயராலோ, வேறு எந்த இயலின்பெயராலோ, சுமார் 7, 8 வருஷங்களுக்குள்ளாக நடைபெற்றிருக்கும் மகாநாடுகளில் மதுரை மகாநாடே முதன்மை பெற்றதாயிருந்தாலும் இந்த மகாநாட்டையும் ஏறக்குறைய அதுபோன்றது என்றே சொல்லலாம். (இதைப்பற்றி மகாநாட்டு அக்கிராசனரே) சொல்லியிருக்கிறார். தமிழ் நாடு பதினொரு ஜில்லாக்களுக்கும் சம்பந்தப்பட்ட அரசியல் மகாநாடுகள் என்று சொல்லப்பட்ட எந்த மாகாண மகாநாடும் இது போல் நடைபெறவேயில்லை. இதற்கு வந்ததுபோல் பிரதிநிதிகளும் விஷயங்களைக் கண்டுகளிக்கவந்த மகாஜனங்களும் அவர்களுக்கேற்பட்டிருந்த உற்சாகங்களையும் கவனித்துப் பார்ப்போமேயானால் ஒரு நாலைந்து அரசியல் மகாநாடு என்று சொல்லப்பட்டவைகளுக்கு வந்திருந்த பிரதிநிதிக் கூட்டங்களின் மொத்த அளவைவிட இது எவ்வகையிலும் குறைந்ததல்லவென்றே சொல்லலாம். சாதாரணமாக திருவண்ணாமலை, காஞ்சீபுரம், சென்னை ஆகிய மூன்று இடங்களுக்கும் பொதுவாக தமிழ்நாட்டின் 2½ கோடி மக்களின் காங்கிரஸ் பிரதிநிதிகள் என்று சொல்லிக்கொண்ட காங்கிரஸ் பிரதிநிதிகளின் எண்ணிக்கையைக் கூட்டிப்பார்த்தால் இம்மூன்றும் முறையே சுமார், 80, 180, 125 ஆக 500 பிரதிநிதிகள்தான் வந்திருக்கக்கூடும். ஆனால் அவற்றின் 10ல் ஒருபாக ஜனத்தொகையாகிய சுமார் 20 லக்ஷம் ஜனத்தொகை கொண்ட தஞ்சை ஜில்லா மகாநாட்டுக்குமாத்திரம் 3000 ஜனங்களுக்குமேல் ஜில்லாவின் பல பாகங்களிலிருந்தும் மாகாணத்தின் பலபாகங்களிலிருந்தும் வந்திருந்தார்களென்றால் எதை உண்மையான பிரதிநிதித்துவ சபையென்று சொல்லுவது? ஆகவே பெருத்த பிரதிநிதித்துவமுள்ள மகாநாடு இதுவே என்று சொல்வதில் யோக்கியமான யாருக்கும் ஆக்ஷேபணை இருக்காது. மகாநாட்டுப் பந்தல் ஏறக்குறைய 150 அடி நீளமும் சராசரி 75 அடி அகலமுமிருக்கலாம். வெகு அலங்காரமாகவும் அநேக நீதி வாக்கியங்களாலும் அலங்கரிக்கப்பட்டிருந்தது. கொட்டகைக்குள் கதர் காக்ஷியும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. பட்டணத்தின் முக்கிய தெருக்கள் முழுதும் தோரணங்களும் பச்சிலைகள் ஜோப்பும் பெருத்த பெருத்த வளைவுகளும் அவ்வளைவுகளில் ஸ்ரீமான்கள் கிருஷ்ணன் நாயர் பனகால் அரசர், ஈ. வெ. ராமசாமி நாயக்கர், திரு வி. கலியாணசுந்தர முதலியார், கண்ணப்பர் முதலிய கனவான்கள் பேர்களும் மற்றும் அவர்கள் பெருமையும் மற்றும் பல வாக்கியங்களுமே கொண்ட வாசகங்கள் எழுதிக் கட்டியிருந்தன. சென்னையில் இருந்து வந்தவர்களையும் மகாநாட்டு அக்கிராசனர் முதலியவர்களையும் ஊர்வலமாக அழைத்துச்செல்ல காலை 6 மணிக்கே சுமார் 2000 ஜனங்களும் பாண்டு மேளம் முதலிய வாத்தியங்களும் ரயிலடிக்கு வந்து காத்திருந்தன. ஆனால் மகாநாட்டுத் தலைவரும் ஈ. வெ. ராமசாமி நாயக்கர் முதலானவர்களும் திருநெல்வேலி திருச்சி மார்க்கமாக வந்ததாலும் அந்த வண்டி 10½ மணிக்கு வந்ததாலும் அதுவரை அநேகம் பேர் காத்திருக்கமுடியாமல் போனாலும் 1000 ஜனங்களுக்குக்குறையாமல் ரயிலிலேயே காத்திருந்தனர். ஸ்ரீமான்கள் அக்கிராசனர் ஸ்ரீமான் எம். கிருஷ்ணன் நாயர் திருநெல்வேலி திவான்பகதூர் குமாரசாமி செட்டியார் டி. கே. சிதம்பரநாத முதலியார், மதுரை பி. டி. ராஜன், W.P. A. சௌந்திர பாண்டிய நாடார், ஈ. வெ. ராமசாமி நாயக்கர், எஸ். ராமநாதன், ஜே. என். ராமநாதன் மற்றும் திருச்சி, மதுரை, சேலம், வடஆற்காடு முதலிய இடங்களிலிருந்து வந்த சுமார் 100 கனவான்களும் ராமேஸ்வரம் எக்ஸ்பிரசில் வந்து சேர்ந்ததும் அளவிடமுடியாத குதூகலத்துடன் தலைவர்களுக்கு ஜேய் என்ற சப்தத்துடன் வரவேற்று மாலையிட்டு சிற்றுண்டி கொடுத்து இரண்டு குதிரை பூட்டிய சார்ட்டு வண்டியில் தலைவர் ஸ்ரீமான் கிருஷ்ணன் நாயர் அவர்களை உட்கார வைத்து ஒருபுறம் தஞ்சை ஜில்லா போர்டு பிரசிடெண்டு ஸ்ரீமான் பன்னீர்செல்வம் அவர்களும், மறுபக்கம் உபசரணை கமிட்டி அக்கிராசனர் ஸ்ரீமான் சின்னையா பிள்ளை அவர்களும் உட்கார்ந்து முன்னால் செல்லவும் பின்னால் சுமார் 7, 8 மோட்டார் கார்களில் மற்றும் முக்கியமானவர்கள் வரிசையாய் செல்லவும் வாத்தியகோஷங்களும் ஜேகோஷங்களும் முழங்கவும் சுமார் 150 200 தொண்டர்கள் வரையில் இருமருங்கிலும் இருந்துகொண்டு மற்றும் வெளியூரிலிருந்து வந்திருந்த கனவான்களை முன்புறம் மத்தியில் நடந்துவரவும் பெரியராஜகோலத்துடன், நல்ல கொடுமையான வெய்யிலில் மெதுவாக ஊர்வலம் வந்தது. வந்திருந்த தலைவர்கள் வெய்யிலைப்பற்றி எவ்வளவு தூரம் விரைவாய் விடும்படி சொல்லியும் அவ்வூர் ஜனங்கள் கேட்காமல் மெள்ளவே ஊர்வலத்தை நடத்தினார்கள். வாத்தியக்காரர்களும் கேட்காமல் நின்று வாசித்தார்கள். கடைசியாய் தலைவர்கள் கண்டிப்பாய் சொன்னபிறகு ஊர்வலம் சற்று விரைவாகச் செல்ல ஆரம்பித்து ரயில்வே ஸ்டேஷனிலிருந்து ஒரு மைல் வருவதற்கே ஒரு மணி நேரமாகிவிட்டதால் மேல்கொண்டு ஊர்வலத்தை நடத்தாமல் நிறுத்தி மத்தியிலேயே இறங்கி ஜாகைக்குப்போய்விட்டார்கள் இதனால் அவ்வூரார்களுக்கு கொஞ்சம் மனவருத்தமென்றே சொல்லவேண்டும். பிரதிநிதிகளுக்குத் தனியாக பல பெரிய கட்டிடங்களும் சாப்பாட்டுக்கு பெருத்த ஏற்பாடுகளும் செய்யப்பட்டிருந்தது. எல்லா சமையல்களும் பார்ப்பனரல்லாதாரைக் கொண்டே நடந்தது. எவ்வித ஜாதிமத வகுப்பு வித்தியாசமும் இல்லாமல் சகலமும் சமபந்தி சாப்பாடாகவே இருந்தது.

### முதல் நாள் நடவடிக்கை.

மகாநாடு சரியாய் 2-30 மணிக்கு ஆரம்பிக்கப்பட்டது. மேடையில் காணப்பட்டவர்களில் குறிக்கக் கிடைத்தவர்கள் ஸ்ரீமான்கள் திவான்பகதூர் S குமாரசாமி ரெட்டியார் MLC, T K சிதம்பரநாத முதலியார் MLC, P ஆவடையப்ப பிள்ளை B A B L, மதுரை R ஸ்ரீநிவாசகிருஷ்ண நாயுடு B A B L, P T ராஜன் MLC, C சவுந்திர பாண்டிய நாடார் MLC, திருச்சி J P வேதாசலம் பிள்ளை B A, கலியபெருமாள் நாயக்கர், மோகனரங்கம் நாயுடு B A B L, C ஜெயராம நாயுடு, T வரதராஜுலு நாயுடு, அப்பாசாமி முதலியார், காஞ்சீபுரம் C சுப்ரமணிய முதலியார், M K ராகவன், பனகால் ராஜா, சர் A P பாத்ரோ, A ராமசாமி முதலியார், J N ராமநாதன், T V சுப்ரமணியம், S ராமநாதன், M A B L, E V ராமசாமி நாயக்கர், திரு வி. கலியாணசுந்தர முதலியார் N தண்டபாணி பிள்ளை, G N சோமசுந்திரம் பிள்ளை, N டேவிட் நாடார் D சேவியர், முனிசிபல் சேர்மென், மாயவரம் S ரத்தினம் பிள்ளை மாயவரம் தாலூகா போர்டு பிரசிடெண்டு, M முத்தையா முதலியார் மாயவரம், R சின்னையா பிள்ளை மாயவரம், S முத்தையா பிள்ளை வக்கீல் மாயவரம் ஹக்கீம் ஷம்சுதீன் சாயபு மாயவரம், பிறையார் K C ராஜதுரை செட்டியார், V கனகசபை நாடார், R கந்தசாமி மூப்பனார் ஜில்லா போர்டு மெம்பர் கும்பகோணம், N R K நாராயணசாமி நாயுடு, கும்பகோணம், A P வெங்கிட்டநாராயண பிள்ளை கும்பகோணம், R C வெங்கிட்டராம நாயுடு கும்பகோணம், ஆதியப்ப முதலியார் கும்பகோணம், சிவசுப்ரமணிய முதலியார் திருவாரூர், K ஷண்முகம் பிள்ளை திருவாரூர், பாவா C கோபாலசாமி முதலியார் திருவாரூர், B ராஜகோபால் நாயுடு தாலூகா போர்டு பிரசிடெண்டு நாகப்பட்டணம், V P காயாரோகணம் பிள்ளை ஜில்லா போர்டு மெம்பர், M K குப்புசாமி பிள்ளை நாகப்பட்டணம், V S சட்டைய பிள்ளை சவுந்திராஜுலு வக்கீல் நாகப்பட்டணம், S. வேணுகோபால் நாயுடு B A B L பட்டுக்கோட்டை, A T பன்னீர்செல்வம் ஜில்லா போர்டு பிரசிடெண்டு தஞ்சாவூர், V அளகிரிசாமி நாயுடு B A B L தஞ்சாவூர், A சோமசுந்திரம் பிள்ளை B A B L தஞ்சா

லூர், I குமாரசாமி பிள்ளை தஞ்சாவூர், சாமி சிதம்பரனார் தஞ்சாவூர், சேலம் சு. சிவப்பெருமாள் பிள்ளை ஈரோடு, வேடி செட்டியார் காரைக்குடி குமரன் பத்திராதிபர், முருகப்பசெட்டியார் அவர்களும் இன்னும் நாட்டுக்கோட்டை செட்டியார்மார்களும் மற்றும் அநேகரும் வந்திருந்தார்கள்.

முதலில் கடவுள் வணக்கம் தலைவர்கள் வாழ்த்து முதலியதுகள் நடந்ததும் மகாத்மாவின் படத்தைத் திறந்து வைக்கும்படி உபசாரனை அக்கிராசனர் ஸ்ரீமான் சின்னையா பிள்ளை அவர்கள் கனம் பனகால் அரசரை வேண்டிக்கொள்ள அவர் சில பெருமையான வார்த்தைகளால் பெருத்த கரகோஷத்துடன் படத்தை திறந்தபிறகு ஸ்ரீமான் சின்னையா பிள்ளை அவர்கள் தமது வரவேற்பு உபந்யாசத்தைப் படித்தார். பிறகு தலைவரை தேர்ந்தெடுக்கும் முறையில் ஸ்ரீமான் சின்னையா பிள்ளை அவர்கள் பிரேரேபித்தபிறகு ஸ்ரீமான்கள் ஜில்லா போர்டு பிரசிடெண்டு பன்னீர்செல்வம் தாலூகா போர்டு பிரசிடெண்டு எஸ் ரத்தினம் பிள்ளை மாயவரம் முனிசிபல் சேர்மென் சோமசுந்திரம் பிள்ளை அகில இந்திய நூற்போர்சங்க தமிழ் நாட்டு காரியதரிசி ஸ்ரீமான் எஸ் ராமநாதன் கும்பகோணம் மாஜி தாலூகா போர்டு பிரசிடெண்டு கந்தசாமி மூப்பனர் பட்டுக்கோட்டை வேணுகோபால் நாயுடு மாயவரம் ஜில்லா போர்டு மெம்பர் ஜனாப் ஷம்சுதீன் சாயபு நாகை ஜில்லா போர்டு மெம்பர் காயாரோகணம் பிள்ளை திருநெல்வேலி ஜில்லா போர்டு பிரசிடெண்டு குமாரசாமி செட்டியார் M L C, T K சிதம்பரநாத முதலியார் M L C, ஏ. ராமசாமி முதலியார், என். தண்டபாணி பிள்ளை, ஈ. வெ. ராமசாமி நாயக்கர் முதலியவர்கள் ஆமோதித்து ஆதரித்தார்கள். ஸ்ரீமான் நாயக்கர் பிரேரேபிக்கும் பொழுது பார்ப்பனர்கள் கொடுமையில் இருந்து நாம் தப்புவதற்காக கூட்டப்பட்ட இக்கூட்டத்திற்கு ஸ்ரீமான் கிருஷ்ண நாயரே தகுந்தவர் என்றும் ஏனென்றால் எனது நண்பர் ஸ்ரீமான் எஸ் ராமநாதன் பிரேரேபிக்கும் போது மலையாள தேசத்தில் உள்ள அநேக பாகங்களில் சகல பூமிகளின் பேரிலும் பார்ப்பனர்களுக்கே ஆதிக்கமிருப்பதால் அதை ஒழிக்க மலையாளக் குடிவார மசோதா கொண்டு வந்தவர் ஆதலால் இவரே நமது நாட்டில் நமக்கு விரோதமாய் உள்ள பார்ப்பன ஆதிக்கத்தை ஒழிக்கத்தக்க வழி சொல்லக்கூடும் என்று சொன்னார். ஆனாலும் நான் அதை விட இன்னமொன்று சொல்லுகிறேன் அதாவது மலையாளத்தில் உள்ள பூமிகள் மீது மாத்திரம் பார்ப்பனர்களுக்கு ஆதிக்கமில்லை அங்குள்ள நமது பெண்டு பிள்ளைகள் மீது கூட பார்ப்பனர்களுக்கு தான் முதல் ஆதிக்கம் அவைகளைக் கூட ஒழிக்கப்பாடுபட்டார் ஆதலால் அவருக்கே பார்ப்பனீயக் கொடுமை இன்னதென்பது நம்மெல்லோரையும் விட நன்றாகத் தெரியும் என்றும், அதனாலேயேதான் இம்மகாநாட்டுக்கு ஒரு தலைவர் வேண்டுமென்றும், என்னையே குறிப்பிடும்படி எனது நண்பர் ஸ்ரீமான் ஆர். சின்னைய பிள்ளை கேட்டபோது உடனே நான் ஸ்ரீமான் கிருஷ்ண நாயர் பெயரைச்சொன்னேன், சொன்னவுடன் என்னையே நேரில் போய் கேட்டு சம்மதி பெற்றுவரும்படி அனுப்பினார்கள் நான் போய் சொன்னவுடனே யாதொருபதிலும் சொல்லாமல் ஒப்புக்கொண்டார்கள் என்றும், அவர் திருவாங்கூர் ஜட்ஜாகவும் திருவாங்கூர் சமஸ்தான திவானாகவும் இருந்தார் என்றும், திருவாங்கூரில் ஏற்பட்ட 100 வருஷம் திவான்களில் எல்லோரும் பார்ப்பனர்கள் என்றும், இவர் ஒருவரே பார்ப்பனரல்லாதவர் என்றும் அவர் ஒரே நிலையில் உள்ளவர் என்றும் பெருத்த தேசாபிமான சமூகாபிமானச் செல்வர் என்றும், சொல்லி ஆமோதித்தார். பிறகு கரகோஷத்தினிடையே பிரதிநிதிகள் சம்மதம் பெற்றவுடன் ஆசனத்தமர்ந்து தலைவர் உபன்யாசத்தை தமிழில் வாசிக்க முடியாததற்கு மன்னிப்பு கேட்டுக்கொண்டு ஆங்கிலத்தில் வாசித்தார் வரவேற்பு அக்கிராசனர் உபன்யாசம் வாசிக்கும் போதும் கொட்டகையில் சுமார் 2000, ஜனங்களே இருந்தபோதிலும், தலைவர் உபன்யாசம் நடக்கும் போது 4000 பேருக்கு மேலாகவே இருந்தார்கள் வெளியில் கொட்டகையைச் சுற்றிலும் கூடியிருந்த ஜனங்கள் 1000 பேருக்கு மேலாகவே இருக்கும். தலைவர் உபன்யாசம் ஆங்கிலத்தில் வாசித்தாலும் ஜனங்கள் 2, 3, மணி நேரம் அமைதியாகவும் பொறுமையாயும் இருந்தது மிகவும் குறிப்பிடத்தகுந்தது எல்லோருக்கும் தமிழ்மொழிபெயர்ப்பு ஸ்ரீமான் கண்ணப்பரால் மொழிபெயர்த்ததை திராவிடன் அனுபந்தமாக வினியோகிக்கப்பட்டது தலைவர் உபன்யாசம் முடிந்ததும் விஷயாலோசனைக்கமிட்டிக்கு அங்கத்தினர்களைத் தெரிந்தெடுக்க வேண்டிய முறை சொல்லி மகாநாட்டை மறுநாள் 2 மணிக்கு ஒத்தி வைக்கப்பட்டது.

### சமரச சன்மார்க்க மகாநாடு

இது முடிந்தவுடன் அதே கொட்டகையில் அதே கூட்டத்தில் சமரசசன்மார்க்க மகாநாடு கூட்டப்பட்டது இச்சமயம் பல சர்க்கார் உத்தியோகஸ்தர்களும் முன்னிலைக்கு வந்தது குறிப்பிடத்தகுந்தது மகாநாட்டுத் தலைவர் ஸ்ரீமான் டி. வி. கல்யாணசுந்திர முதலியார் அவர்கள் ஸ்ரீமான் கிருஷ்ண நாயரின் உபன்யாசம் நடந்து கொண்டிருக்கும் போது கொட்டகைக்குள் பிரவேசித்ததும் ஜனங்கள் செய்த ஆரவாரத்திற்கு அளவே இல்லை.

சன்மார்க்க மகா நாட்டு உபசாரனை அக்கிராசனர் ஸ்ரீமான் பொறையார் சேர்மென் ராஜதுரை செட்டியார் அவர்களால் வாசிக்கப்பட்டதும் அக்கிராசனரை பிரேரேபித்து முறையே பலர் ஆமோதிக்க பெருத்த கரகோஷத்தினிடையே அக்கிராசனர் முக்கால் மணி நேரம் எழுதிக்கொண்டு வந்ததை படித்தும் முக்கால் மணி நேரம் வாய்ப்பேச்சாகவும் உபன்யாசம் செய்தார் எழுதிப் படித்ததைவிட வாயில் பேசினதுகளே மக்கள் மனதைக் கவர்ந்து விட்டது அவர் பெரும்பான்மையும் உயர் ஜாதிக்காரர்கள் என்று சொல்லிக்கொள்ளும் பார்ப்பனர்கள் செய்யும் அக்கிரமத்தையும், அவர்கள் தங்கள் சுயநலத்துக்காக வேதம் சாஸ்திரம் என்னும் பேரால் செய்துவைத்துக்கொண்ட அக்கிரமமான ஆதாரங்களைப்பற்றியும் ஒவ்வொரு பார்ப்பனனும் வெட்கப்படும்படி மதிக்கத்தக்க ஆதாரங்களுடன் பேசினார், மடாதிபதிகள் சங்கராச்சாரிமார்கள் என்போர்கள் செய்யும் அக்கிரமங்களைப்பற்றியும் நன்றாயும் தைரியமாயும் எடுத்துச் சொன்னார் மடாதிபதிகளையும் சங்கராச்சாரியர்கள் என்பவர்களையும் தொலைத்து அம்மடங்களையும் நல்வழிப்படுத்த சத்தியாக்கிரகம் செய்யவேண்டும் என்று சொன்னார். கோவில்களை எல்லாம் பஹிஷ்காரம் செய்யவேண்டும் என்றும் அதிக சொத்துள்ள கோவில்களாயிருந்தால் அவற்றை கைப்பற்ற வேண்டும் என்றும் சொன்னார். மற்றும் பெண்கள் உரிமையைபற்றியும் தீண்டாதார் என்போர்களின் உரிமையைப்பற்றியும் மிகத்தெளிவாக பேசினார்.

தவிரவும் பார்ப்பனர்களைக்கொண்டே புரோகிதம் செய்யவேண்டுமென்பது அறியாமை என்றும், பார்ப்பனர்களைக்கொண்டே கடவுள் தரிசனம் செய்யவேண்டுமென்பது அறியாமை என்றும், சடங்குகளுக்குப் பார்ப்பனர்களே இருந்து நடத்தவேண்டுமென்பது அறியாமை என்றும், ஜாதிபேதமில்லாமல் யோக்கியமும் அறிவும் கல்வியும் கொண்ட யாரைவேண்டுமானாலும் கொண்டு நடத்தலாம் என்றும் பல நூல் ஆதாரங்களைக் கொண்டு விளக்கிக்காட்டினார்.

இதன் மத்தியில் தான் அரசியல் விடுதலை விரும்புகிறவனானாலும் இந்தியாவில் உள்ள எந்த அரசியல் கட்சியையும் சேர்ந்தவரல்ல என்பதையும் எல்லா கட்சியில் இருந்தும் தான் விடுபட்டிருப்பதாயும் சொன்னார் அதன் காரணம் ஒரு அரசியல் கட்சியும் யோக்கியமாய் நடைபெறவில்லை என்றும் ஒரு கட்சியினாலும் ஒரு பிரயோஜனமும் உண்டாகாதென்றும் பிறவியில் உயர்வு தாழ்வு பெண்களை ஆண் அடக்கி ஆள்கிற கொடுமையும் உள்ளவரையில் விடுதலை பெற எண்ணுவது யோக்கியமல்லவென்றும் அது முடியாத காரியம் என்றும் சொன்னார். தவிரவும் பெண்களைச் சிறுமைப்படுத்தும் முறை பார்ப்பனர்களால் ஏற்பட்டதென்றும் பார்ப்பனர்கள் நமது நாட்டிற்கு வருமுன் நமது நாட்டில் பெண் மக்கள் உயர்வு பெற்று கல்வி முதலியதுகளில் மேதாவிகளாகவும் ராஜ்ய பாரம் முதலியதுகளும் செய்யத்தக்க வீரத் தாய்மார்களாகவும் இருந்தார்கள் என்றும், பிறவியில் உயர்வு தாழ்வு இல்லாமல் அன்புமயமான சமத்துவத்துடன் இருந்தார்கள் என்றும், பார்ப்பனர்கள் நமது நாட்டில் கால்வைத்தபின்பே நம் நாடு இக்கொடுமைகள் கொண்ட கெதிக்களாயிற்று என்றும் மக்கள் நன்றாய் உணரும் படி கூறினார் பார்ப்பனர்கள் சன்மார்க்க சங்கத்தில் சேர்ந்து உழைப்பதானால் அவர்கள் முதலில் தங்கள் பூணூலை எடுத்து விட்டு வரவேண்டுமென்றும் கூறினார் இப்பொருள் கொண்ட வாக்கியங்களை கேட்குந்தோறும் கேட்குந்தோறும் அங்கு கூடி இருந்த மக்கள் செய்த ஆரவாரத்திற்கும் கரகோஷத்திற்கும் காட்டிய உற்சாகத்திற்கும் அளவே கிடையாது. அப்பொழுதே

(இதன் தொடர்ச்சி 12-ம் பக்கம் பார்க்க.)

## சிங்கப்பூர்

ஸ்ரீமான்கள் கோ. சாரங்கபாணி நாயுடு, கோபால், ராஜகோபால், சுப்பையா, கோவிந்தசாமி, வெங்கிடாசலபதி ஆகிய கனவான்களும், ஜொகூர் 'குடி அரசு" அபிமானிகளும் சேர்ந்து கீழ்க்காணும் கனவான்களை "குடி அரசு" சந்தா நேயர்களாகச் சேர்த்துக் கொடுத்திருக்கிறார்.

246 ஏ ஏ சுப்பைய செட்டியார்
247 வி கே எஸ் நாராயண மண்டோர்
248 பி கே ஏ முருகப்பா
249 எஸ் ராமசாமி ஒந்திரியார்
250 ஏ எம் முத்தைய செட்டியார்
251 எஸ் வி ஆர் ஏ கண்ணப்ப செட்டியார்
252 என் எல் நாகப்ப செட்டியார்
253 எஸ் கே ஆர் எஸ் எஸ் டி ராமனுத பிள்ளை
254 ஏ எல் பி முத்து வீரப்ப செட்டியார்
255 பி டி முகமது அபூபக்கர் ராவுத்தர்
256 ஏ எம் சிதம்பரம பிள்ளை
257 ஏ சேகதாவுத்
258 எம் ஏ அப்துல் ஆதி
259 எம் எஸ் அலாவுதீன்
260 வி என் பி பழனியப்ப செட்டியார்
261 எம் எஸ் வைத்தியநாத வண்ணியார்
262 எம் முனியாண்டி தேவர்
263 W M ஜோசு
264 சி கந்தசாமி பிள்ளை
265 வி கே சின்னப்பா
266 எம் எஸ் செல்ல துரை
267 எச் எம் இப்ராஹிம்
268 கே எஸ் உத்தரபதி நாடார்
269 ஓ சுலேமான்
270 அலி முகமது
271 காதர் பாச்சா
272 எச் முகம்மது இப்ராஹீம்
273 ஏ ஏ எம் என் முத்துராமன் செட்டியார்
274 எஸ் எம் அபூபக்கர்
275 எஸ் பி எல் முகதைய செட்டியார்
276 வி என் வி காளிமுத்து பிள்ளை
277 கே ஏ ஆர் கே கண்ணப்ப செட்டியார்
278 எம் எம் நாராயண செட்டியார்
279 என் சிங்காரம்
280 முத்துவடுவு பிள்ளை
281 பி ஆர் ஏ லட்சுமண செட்டியார்
282 என் கணபதி பிள்ளை
283 கே வேலு பிள்ளை
284 எஸ் ஆர் என் சோல அளகு பிள்ளை
285 பி எல் வி பழனியப்ப செட்டியார்
286 டி சுப்பையா
287 ஏ எம் மருத பிள்ளை
288 எஸ் பி எம் முத்துவடுவு
289 பி ஆர் எம் செல்லப்ப செட்டியார்
290 எம் கே ஆர் கருப்பன் செட்டியார்
291 ஏ எம் காத்தமுத்து பிள்ளை
292 ஏ எம் டி டி முத்துக்கருப்பன் செட்டியார்
293 எம் ஏ எம் எஸ் பி முத்தப்ப செட்டியார்
294 எஸ் டி எஸ் பி சொக்கலிங்கம் செட்டியார்
295 கே ஆர் எம் ஆர் எம் சருப்பைய செட்டியார்
296 எஸ் டி பி ஆர் எம் கருப்பைய பிள்ளை
297 சி டி எம் வெங்கடாசலம் செட்டியார்
298 பி கே என் வீரப்ப செட்டியார்
299 எஸ் பி எஸ் அளகப்ப செட்டியார்
300 எஸ் ஆர் எம் எஸ் முத்துராமன் செட்டியார்
301 கே என் நாராயணன் செட்டியார்
302 பி டி ஏ எஸ் மாணிக்கம் பிள்ளை
303 பி எஸ் டி வி பென்னப்ப பிள்ளை
304 பி ஆர் பி ராமச்சந்திரம் பிள்ளை
305 எம் பி ஆர் முத்து பழனியப்ப செட்டியார்
306 வி பி எல் சிதம்பரம் செட்டியார்
307 ஆர் எம் எம் ?வலபப செட்டியார்
308 எம் பி எல் நய்னப்ப செட்டியார்
309 ஆர் எம் ஈ டி மாணிக்கம் பிள்ளை
310 டி எஸ் என் ஆலந பிள்ளை
311 ஜி ஆர் நடேசம் பிள்ளை
312 ஏ பி எல் எ ராமசாமி செட்டியார்
313 எம் எஸ் பி கண்ணப்ப செட்டியார்
314 டி என் எம் அப்துல் ரஹிமான்
315 எஸ் முகமது இஸ்லாம
316 ஓ அப்துல்காதர்
317 டி எம் அலி முமகது
318 எம் எம் கே எம் சரீப்
319 ஓ எம் முகமது அசன் சாயபு
320 கே வி நாகலிங்கசாமி
321 எம் பழனிபாண்டி படையாச்சி
322 டி என் ரத்தின பத்தர்
323 எம் ஆர் நாராயணசாமி பண்டிதர்
324 பி பொன்னுசாமி பண்டிதர்
325 என் முகமது ஈசுப்
326 எம் நடேச மண்டோ
327 எம் ஜெ எஸ் முகமது ஆலி
328 கே அப்துல் ரகிமான்
329 எச் எம் அப்துல் ரகிமான்
330 என் கே முகமது ஷரீப்
331 வி எம் முகமது அனீப்
332 ஏ எச் எம் மரைக்கார்
333 எம் முகமது ஈசுப்
334 எஸ் சைதா அகமது
335 எஸ் ஈ முகமது அப்துல்லா
336 என் முத்து வேலு
337 எஸ் வி ஷண்முகம்
338 ஈ எம முருகப்ப பிள்ளை
339 எஸ் பொன்னம்பலம்
340 ஈ எம் அபி முகமது
341 ஏ முகமது இஸ்மால்
342 வி எம் நைனா சாயபு
343 ஏ அகமட் பிரதர்ஸ்
344 எஸ் ராமசாமி பண்டிதர்
345 சி ஆர் வைத்தியலிங்கம பிள்ளை
346 என் பெரியசாமி நிங்காரு
347 பி ராமசாமி தேவர்
348 என் மாரிமுத்து நாயக்கர்
349 E P M இப்ருமுகனி
350 எஸ் தீனதயாள நாயுடு
351 வி மருதமுத்து பண்டிதா
352 S VE வைத்திலிங்க பண்டாரம்
353 ஏ ஆசிர்வாதம் பிள்ளை
354 பி என் பொன்னமபலம் பிள்ளை
355 ஆர் சாமிநாத ஆச்சாரி
356 எஸ் லக்ஷ்மண பண்டிதர்
357 எஸ் பி சுப்பியா
358 C B பால
359 பி நடராஜன்

குறிப்பு:—மேற் சந்தாதாரர்களுக்கு தமிழ் மக்கள் சுயமரியாதையின் சார்பாகவும் நமது சார்பாகவும் எமது மனமார்ந்த வந்தனத்தைச் செலுத்துவதுடன் சந்தா நேயர்கள் சேர்க்கும் எமது அன்பர்களுக்கு ஆங்காங்கு வேண்டிய சவுகரியங்கள் செய்துகொடுத்து சந்தா நேயர்களைச் சேர்த்துக்கொடுக்கும் ஏனைய அன்பர்களுக்கும் தமிழ் மக்கள் சுயமரியாதையின் சார்பாகவும் எமது சார்பாகவும் எமது நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம். (ப—ர்.)

## மதிப்புரை.


### "குமரன்" ஆண்டு மடல்.

காரைக்குடி "குமரன்" ஆண்டு மடல் ஒன்று வரப்பெற்றோம். அதில் தேசீயம், ராஜீயம், ஆசார சீர் திருத்தம், கொல்லாமை, ஜீவகாருண்யம். தமிழ் வளர்ச்சி முதலிய கருத்துக்களிற் சிறந்த அறிஞர்களின் கட்டுரைகளில் 1 குழந்தை குமரன் செய்யுள், 2 குமரன் வாழ்த்து, 3 சென்ற ஆண்டு, 4 மகாத்மா காந்தியவர்களின் பொன்னுரை. 5 தனைசிய நாட்டு வைத்தியசாலைகள், 6 தனைசிய நாட்டு வித்தியாசாலைகள், 7 திருக்குறள் மாட்சி, 8 மங்கையின் உயர்குணம், 9 திருமலை நாயக்கன் மஹால், 10 கம்பராமாயண கௌஸ்துப மணிமாலை, 11 பாரதியார் தமிழ்ப் புலமை, 12 செல்வச் சிறுமியார் 13 ஏழைச்சிறுமியார், 14 பிளுகு மலை ரயில் பலிக்களக்காட்சி 15 யாகத்தின் கருத்து, 16 சேவசேனாபதி சிங்கள மன்னனுக்குப் படைத்துணையானது 17 பத்திரிகைகளின் அவசியம், 18 தேகாப்பியாசம், 19 ஆங்கில மொழி வளர்ந்த முறையும் தமிழ் மொழியை வளர்க்கும் முறையும், 20 தமிழர் மணம், 21 செங்கைப்பெருநாள், 22 ஆராய்ச்சி முறை 23 இழந்த மரகதத்தின் இரகசியம், 24 யமலோகக் கான்பரன்ஸ் 25 கந்த புராணமும் கம்ப ராமாயணமும் 26 ஊஞ்சல் பாட்டு, 27 மக்கட் சமுதாய அமைப்பு, 28 ஜமீன்தார் வாழ்க்கை, 29 இன்னிசை. 30 புராணம் பிறந்த வரலாறு. 31 குசபுராணிகர் கேஸ் முதலிய 32. தலையங்கங்களைக் கொண்ட வியாசங்களும் அவ் வியாசங்களுக்கு அனுசரணையான காட்சிப் படங்கள் 36ம், வேடிக்கைப்படங்கள் 36ம் ஆக படங்கள் 72ம் கொண்டு, கண்ணுக்கு அதிரமணியமாகவும் உற்சாகத்தைடம் உணர்ச்சிகளையும் தேசபாஷை, சமூக, சீர்திருத்தம் முதலிய விஷயங்களின் முன்னேற்றத்திற்கு இது ஒரு இன்றியமையாத இன்னுயிர்த் தோழனாக விளங்குவதால் இதை ஒவ்வொரு தேச பாஷை சமூக சீர்திருத்த விஷய அபிமானிகளும் அவசியம் வாங்கி வாசித்தறிந்து ஒழுகற்பாலதென்றே கூறுவோம். இதுவரை தமிழ்நாட்டில் பத்திராதிபர்களால் வெளிவந்த ஆண்டுமடல்களில் மிகுதியும் அறிய விஷயங்கள் கொண்டதுமான ஆண்டுமடல் இது வென்றே சொல்லலாம். இவ்வளவு அழகுக்கும் வடிவுக்கும் கொண்ட பொருள்களுக்கும் இதற்கேற்பட்ட விலை மிகுதியும் குறைவானதென்றே சொல்லலாம்.

இதன் விலை ரூ. 1—4—0

இது கிடைக்குமிடம்.—

திருவாளர் சோ. முருகப்ப செட்டியார்,
குமரன் பத்திராதிபர்,
காரைக்குடி.



குடி அரசு.

ஈரோடு, பிரபவ-ஹு வைகாசி-மீ 2-உ

## மாயவரம் மகாநாடு.

மாயவரத்தில்பார்ப்பனரல்லாதார்மகாநாடும், சமரசச்சன்மார்க்கமகாநாடும் இளைஞர்மகாநாடும் கூடிக்கலைந்துவிட்டது. அதற்குச்சரியென்றும்அவசியமென்றும் தோன்றிய பல தீர்மானங்களும நிறைவேற்றியிருக்கிறது. இம்மகாநாடுநடந்த சிறப்பும்வந்திருந்தபிரதிநிதிகளும் தமிழ்நாட்டின் நாலாபக்கங்களிலிருந்தும் வந்திருந்த பெரியோர்களும் அவர்கள் ஒவ்வொரு தீர்மானத்தின்மீது பேசிய பேச்சுகளும் மக்களுக்குப் பிறந்த உற்சாகங்களும் நேரில் பார்த்தவர்களே அறியக்கூடுமேயல்லாமல், மற்றபடி எவ்விதத்திலும் அதை அப்படியே தெரியப்படுத்துவதென்பது மிகவும் கஷ்டமான காரியமென்றே சொல்லுவோம். இம்மகாநாட்டை நடத்த தஞ்சை ஜில்லா தேச பக்தர்களும் பிரமுகர்களும உழைத்த உழைப்பு மிகவும் பாராட்டத்தக்கதென்றே சொல்லுவோம். இந்நிலையில் பார்ப்பனரல்லாதார் இயக்கத்தினிடத்தில் பொறாமையும் துவேஷமுங்கொண்டு "தமிழ் நாடு" பத்திரிகை செய்த எவ்வளவோ சூழ்ச்சிகளையும் தாண்டி எவ்வளவோ தூரம் சிறப்பாய் நடந்துவிட்டதென்று சொன்னால் யாரும் ஆச்சரியப்பட வேண்டியதுதான். மதுரையில் நடந்த மகாநாட்டின்போதும் ஸ்ரீமான் வரதராஜுலு நாயுடு அவர்கள் காங்கிரசில் உழைத்துவந்த சில தேசபக்தர்கள் மதுரை மகாநாட்டுக்குப் போகாமலிருக்கச் செய்வதற்காக மதுரை மகாநாடு நடந்த தேதியிலேயே தேசீய மகாநாடு என்பதாக ஒரு மகாநாட்டைச் சென்னையில் நடத்தப் போவதாகத் தெரிபபடுத்தியிருந்ததும், இதன் மூலம் யாரையும் அதிகமாகத தடுக்கமுடியாதென்பதாகத் தெரிந்தபிறகு தனது மகாநாட்டை ஒத்திப்போட்டு விட்டதாகத் தெரியப்படுத்திவிட்டதையும் இதற்குமுன் நாம தெரியப்படுத்தியிருக்கிறோம். மாயவரம் மகாநாட்டிலேயும் அதுபோலவே சில இடையூறுகள் ஏற்பட முயற்சித்திருப்பதையும வேறு பக்தியில காணலாம். அப்படியிருந்தும யாதொரு விக்கினமுமின்றி மகாநாடு செவ்வனே நடைபெற்றுவிட்டதானலும மகாநாடு நடந்தபிறகாவது சும்மா இருந்துவிடாமல மறுபடியும் மகாநாட்டைப் பறற "தமிழ் நாடு" குறைகூறி, தனது இயற்கையைக் காட்டியிருக்கிறது. மே-மீ 9-ந் தேதி "தமிழ்நாடு" பத்திரிகையில் "மாயவரம் மகாநாடு" என்ற தலைப்பின்கீழ் எழுதியிருப்பதாவது;—

1 "மாயவரத்தில் நடந்த ஜஸ்டிஸ் கட்சி மகாநாடு முக்கிய விஷயங்களைப்பற்றி யாதொரு தீர்மானமும் செய்யாமல் கலைந்து போய்விட்டது; தஞ்சை ஜில்லாவிலேயே தற்கால முக்கிய விஷயம் தஞ்சை ஜில்லா போர்டு ரயில்வே ஆகும். அது சர்க்காருக்குக் கொடுத்துவிடுவதா அல்லது போர்டாரே வைத்துக்கொள்வதா என்பதுபற்றி பெரிய வாதம் நடந்துகொண்டிருக்கும்போது மாயவரம் மகாநாடு அதை கண்ணெடுத்துக் கூடப் பார்க்கவில்லை"யென்று ஒரு குற்றம் சாட்டியிருக்கிறது.

இதன் யோக்கியதையை கவனிப்போம் தஞ்சாவூர் ஜில்லா போர்டு ரயில்வே சர்க்காருக்குக் கொடுப்பதில்லையென்பதாக எறக்குறைய முன்னமேயே தீர்மானமாகிவிட்டது. அதன்பேரில் மகாநாடு செய்யவேண்டிய வேலை ஒன்றுமே அதிகமாக பாக்கியுமில்லை. அப்படியிருக்க இதை ஒரு பெரிய குற்றமாகக்காட்டி மகாநாட்டைக் கண்டிப்பதின் ரகஸியம் வாசகர்களே உணர்ந்துகொள்ளலாம்.

2. "ஜஸ்டிஸ்கட்சிதேசியக்கொள்கைகளை ஆதரிக்கப்போகிறதா? இல்லையா? என்பது அதன் தீர்மானங்களிலிருந்து தெரியவில்லை" என்பதாக மற்றொரு குற்றம் சாட்டியிருக்கிறது.

தேசியக் கொள்கைகள் என்பதைப் பற்றி நாம் பலதடவை எழுதியிருக்கிறோம். ஆயினும் பல பத்திரிகைகளும் பல தலைவர்களும் தேசியம் என்கிற வார்த்தையை சுயநலத்துக்கும் வயிற்றுப் பிழைப்புக்கும் உபயோகப்படுத்திக்கொண்டு வருகிறார்களென்பதை இந்தக்காலத்தில் பெரும்பான்மையான ஜனங்கள் அறிந்துவிட்டதால் நாம் அதைப்பற்றிமறுபடியும்அதிகம் இதுசமயம் எழுதவில்லை. ஆனாலும், ஜஸ்டிஸ் கட்சி மகாநாடு இந்தக் குற்றத்திலிருந்து தப்புவதற்கு மார்க்கமில்லாமல் நடந்துகொண்டது என்று சொல்லுவதற்கு இடமில்லை. அதாவது அதன் கீழாகவே "மாகாண சுயாட்சி வேண்டுமென்றும் இந்தியா முழுமைக்கும் பூரண பொறுப்பாட்சி வேண்டுமென்றும் அதற்காக இந்தியாவிலுள்ள சர்வ கட்சிகளையும் கூட்டிக்கலந்து, என்ன செய்ய வேண்டுமென்று யோசிக்கவேண்டும்" என்பதாகவும் இரண்டு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டிருப்பதாகவும் ஒப்புக்கொள்ளுகிறது. இப்படியிருக்க எந்த விதத்தில "தமிழ் நாடு" பத்திரிகைக்கு ஜஸ்டிஸ் கட்சியின் தீர்மானங்களிலிருந்து அது தேசியக் கொள்கைகளை ஒப்புக்கொள்ளுகிறதா இல்லையா என்பது தெரியவில்லையோ அது நமக்குவிளங்கவில்லை

3 ஸ்ரீமான் கிருஷ்ணன் நாயர் [illegible] விஷயமாக எவ்வளவோ பேசினர், அதைப்பற்றி ஒரு தீர்மானத்தை [illegible]" என்று ஒரு குற்றஞ் சாட்டியிருக்கிறது. இதுமிகவும் மோசமான காரியம [illegible] "தமிழ் நாடு" பத்திரிகை [illegible] எப்படிப்பட்டதென்பதை [illegible] தெரிந்து கொள்ளலாம "தமிழ் நாடு" பத்திரிகையானது மகாநாட்டில் [illegible] தீர்மானங்களைக்கூட கிரமமாக போடாமல் ஜனங்களுக்கு மகாநாட்டின் பேரில் அதிருப்தி ஏற்படும்படி விஷமப்பிரசாரம் செய்யவும் தைரியம் கொண்டு விட்டது.

இந்த மகா நாட்டில் ரெவின்யூ செட்டில் மெண்டைப்பற்றி ஒரு தீர்மானம் செய்யப் பட்டிருக்கிறது. அதாவது ரெவின்யூ செட்டில் மெண்ட் கொள்கைகள் கொண்ட ஒரு மசோதா சட்டசபையில் கொண்டு வரவேண்டுமென்றும், மற்றும், பல விதமாக வாசகங்கள் கண்டு நிலவரியைப்பற்றி ஒரு தீர்மானம் கொண்டு வந்திருக்கிறது. இப்படியிருக்க அடியோடு தீர்மானமேகொண்டு வரவில்லை என்று குற்றங் கூறுகிறது. "சுயராஜ்யக்கட்சியார் நடத்தையைப்பற்றி ஜஸ்டிஸ் கட்சியார் இனி சட்டசபையில் என்ன செய்யப்போகிறார்கள் என்பதைப் பற்றி ஒன்றும் தீர்மானம் செய்ய வில்லை யென்று ஒரு குற்றம சாட்டியிருக்கிறது. அதற்கு நாலுவரிக்குமேலேயே மகாநாடு மேட்டூர் தேக்கத்தையும்சர்வகலாசாலைசீர்திருத்தமசோதாவையும் மட்டும் கண்டிக்கத் தவறவில்லை. இதிலிருந்து ஜஸ்டிஸ் கட்சிதலைவர்கள் தங்களுடைய சட்ட சபை போராட்டத்திற்கு மட்டும் வேண்டியவைகளைகவனித்துக் கொண்டார்கள்" என்று எழுதியிருக்கிறது. இப்படி யிருக்க எவ்விதத்தில் ஜஸ்டிஸ் கட்சியார் இனி என்ன செய்யப்போகிறார்கள் என்பதைத் தெரியப்படுத்தவில்லை என்று "தமிழ் நாடு" சொல்வதற்கு நியாயமிருக்கிறது?

5 'ஜஸ்டிஸ் கட்சியாருக்கு மந்திரிபதவியில் ஆசையுண்டா? கிடைத்தால் எம்மாதிரி நடந்து கொள்ளப்போகிறார்கள் என்று ஒரு தீர்மானமும் செய்யவில்லை" யென்று ஒரு குற்றம் சாட்டியிருக்கிறது. இது எவ்வளவு தூரம் வேண்டுமென்றே அக்கிரமமாகச் சாட்டிய குற்றமென்பதை ஒரு மூடன்கூட சுலபமாக அறிந்து கொள்ளக்கூடுமென்றே நினைக்கிறோம். ஜஸ்டிஸ் கட்சித்தலைவர் என்போர்கள் மதுரை மகா நாட்டிலேயே இந்தசட்டசபையில் தாங்கள்மந்திரிப்பதவியை ஏற்றுகொள்ளபபோவதில்லை என்பதாக தெரியப்படுத்திவிட்டார்கள். அப்படிக்கிருக்கமாயவரம் மகாநாட்டில்மந்திரிப்பதவியில் ஆசையுண்டா என்பதைப்பற்றியும் கிடைத்தால் எம்மாதிரி நடந்துகொள்ளுவோம் என்பதைபபற்றியும் தெரிவிக்கவோ தீர்மானம் செய்யவோ இடமெங்கேயிருக்கிறது? என்பதை வாசகர்கள் தான் முடிவுசெய்து கொள்ள வேண்டும்.

6. மாகாண சுயாட்சி கேட்பதும் இந்தியாவுக்குப் பொறுப்பாட்சி வேண்டுமென்பதும் ஒன்றுக்கொன்று முரண்பட்டதாயிருக்கிறது' என்பதாக ஒரு குற்றம சாட்டியிருக்கிறது. நமது மாகாணத்துக்குப் பூரண பொறுப்பாட்சிகேட்பதும, இந்தியாவுக்கும பொறுப்பு வாய்ந்த அரசாங்கத்தைப் பெற திட்டங்களை வகுப்பதற்கு நாட்டிலுள்ள எல்லா அரசியல் வாதிகளுடைய [illegible]. மகாநாடு ஒன்றைக்கூட்டவேண்டியதற்கான முயற்சியை சென்னைத் தெரிந்தெடுத்த [illegible] சங்கமொன்றுக்கொள்ளவேண்டும் என்று செய்யப்பட்ட தீர்மானமானது எப்படி ஒன்றுக்கொன்று முரண்பட்டதாகு

மென்பது நமக்கு விளங்கவில்லை. இதையும் வாசகர்களே தான் யோசித்துக்கொள்ள வேண்டும் தவிர,

7. "ஜஸ்டிஸ் கட்சியார் கேட்பது மாகாண சுயாட்சியா? அல்லது பூரண சுயராஜ்யமா? என்று தெரியவில்லை"

என்பதாக ஒரு குற்றஞ் சாட்டியிருக்கிறது. மாகாணத்துக்குப் பூரா பொறுப் பாட்சியும் கேட்டு விட்டு, இந்தியா முழுவதுக்கும் பொறுப்பாட்சிக்கான திட்டங்கள் வகுக்க எல்லா கட்சியார்களையும் ஒன்று கூட்டி யோசிக்க வேண்டுமென்று சொல்லும் போது, "தமிழ் நாடு" பத்திரிகைக்கு எப்படி சந்தேக மேற்பட்டிருக்கிற தென்பது நமக்கு விளங்கவில்லை. தவிர, 8 "பூரண சுயராஜ்யத்திற்கு வேலை செய்ய சர்வ கட்சி மகாநாட்டைக் கூட்ட வேண்டு மென்றால், மாகாண சுயாட்சி பெற ஒரு வேலையும் செய்யவேண்டா மென்பது அவர்கள் நினைப்பா"? என்று ஒரு கேள்வி கேட்பதன் மூலம் ஒரு குற்றத்தைச் சுமத்தியிருக்கிறது. இந்தக் கேள்வி "தமிழ் நாட்டி"ற்கு எப்படி உண்டாயிற்றென்பதே தெரியவில்லை.

9. இவ்வளவையும் எழுதி விட்டு "இவை யெல்லாம் ஜஸ்டிஸ் கட்சியாரின் மனக் குழப்பத்தையே காட்டுகின்றன. தேர்தலில் தோற்ற வேகத்தினால் மதுரையில் கூடி பல ஆச்சரியமான தீர்மானங்கள் செய்தார்கள், இப்பொழுது கொஞ்சம் காலம் கடந்து விட்ட போதிலும், அவர்கள் குழப்ப நிலை இன்னும் தெளிவடையவில்லை யென்பதையே மாயவர மகாநாட்டுத் தீர்மானங்கள் காட்டுகின்றன" என்று எழுதி கேவலப் படுத்தியிருக்கிறது. எந்தத் தீர்மானத்தின் மூலம் குழப்பமிருப்பதாகக் கண்டு பிடித்திருக்கிறது? என்பது நமக்கு விளங்கவில்லை

10. "ஜஸ்டிஸ் கட்சியார் கதர் கட்டிக் கொள்வதும், தீண்டாமை ஒழிக்க வேண்டும், சுயராஜ்யம் வேண்டும் என்று கேட்கத் துணிந்ததும், சென்ற தேர்தலின் பாடம் என்று சொல்லப்படுகிறது" என எழுதியிருக்கிறது; யாரால் சொல்லப்படுகிறது என்பதை எழுதவில்லை. தீண்டாமை ஒழியக்கூடாதென்றாவது, சுயராஜ்யம் வேண்டாமென்றாவது ஜஸ்டிஸ் கட்சியார் எப்போதாவது, எங்காவது சொல்லியிருக்கிறார்களா என்பதை யோசித்துப் பார்க்கும்படி வாசகர்களையே கேட்டுக் கொள்ளுகிறோம்.

11. "ஜஸ்டிஸ் கட்சியாருக்கு இந்த நல்ல புத்தி ஏற்பட்டிருப்பதைக் கண்டு நாம் சந்தோஷிக்கிறோம்" என்று எழுதியிருக்கிறது. "தமிழ் நாடு" பத்திரிகை உண்மையாகச் சந்தோஷப்படுவதாயிருந்தால் "தமிழ் நாடு" பத்திரிகைக்கு இம்மாதிரி விஷமப் பிரசாரம் செய்ய மனம் வருமா? என்பதை வாசகர்களே யோசித்துப் பார்க்கட்டும்.

12. "ராஜீய விஷயத்தில் ஜஸ்டிஸ் கட்சிக்கு இன்னும் பழய பின புத்திப் போகவில்லை" என்று எழுதியிருக்கிறது. ராஜீய விஷயத்தில் ஜஸ்டிஸ் கட்சியின் பின் புத்தி என்ன? "தமிழ் நாடு" வினுடையவோ, காங்கிரஸினுடையவோ, சுயராஜ்யக்கட்சியினுடையவோ, ஸ்ரீமான் வரதராஜுலு நாயுடு வினுடையவோ, ராஜீய விஷயத்திலுள்ள "முன் புத்தி" இன்னதென்று தெரியப்படுத்தினால் யோக்யமாயிருக்கும். இன்னும் என்னென்னமோ படிப்பதற்கே புரியாமல் உளரிக் கொட்டியிருக்கிறது இதை யெல்லாம் பார்க்கும் பொழுது "தமிழ் நாடு" பத்திரிகையானது தன்னுடைய ஜாண் வயிறு வளர்ப்பதற்காக எவ்வளவு இழிவான காரியத்தைச் செய்யத் துணிந்திருக்கிற தென்பதையும், எவ்வளவு பெரிய சமூகத்தையும் பலி கொடுக்கத் துணிந்திருக்கிற தென்பதையும் அப் பத்திரிகைக்கு கடுகளவாவது மனச்சாட்சியோ, இருதய சுத்தமோ, மனிதத் தன்மையோ இருக்கிறதா? என்பதை அறியும் விஷயத்தை வாசகர்களுக்கே விட்டு விடுகிறோம்.

மாயவரத்தில் கூடிய 2, 3 மகாநாடுகளிலும் சுமார் 20, 30 தீர்மானங்கள் செய்யப்பட்டிருக்கின்றன. இவைகளில் 5, 6 தீர்மானங்களை மாத்திரம் அந்தப் பத்திரிகையில் போட்டிருக்கிறது. சாதாரண வாரப் பத்திரிகைகள் கூட சிலது முழுத் தீர்மானங்களையும் போட்டிருக்கிறது. பார்ப்பனரல்லாதார் நன்மைக்கென்று ஏற்பட்டிருக்கிற இக்கட்சி விஷயத்தில் இப்பத்திரிகைக்கு இவ்வளவு துவேஷம் ஏன் உண்டாக வேண்டும்? பார்ப்பனர் செய்யும் உபத்திரவம் போதாதென்று கருதியா, இதுவொன்று முளைத்திருக்கிறது? என்று நினைக்கவேண்டியிருக்கிறது. பார்ப்பனப் பத்திரிகைகள் கூட இவ்வளவு மோசமாக நடக்கத்துணியவேயில்லை. "தமிழ் நா " பத்திரிகையானது பார்ப்பனரல்லாதார் சமூகத்துக்கு உடன் பிறந்தே சொல்லும் வியாதியாய்த் தோன்றிவிட்டதைக் குறித்து நாம் வருந்தப்படாமலிருக்க முடியவில்லை இது தவிர இன்னமொரு உபத்திரவம் முளைத்திருக்கிறதையும் வருத்தத்துடன் தெரிவிக்கிறோம் அதாவது நாட்டு கோட்டை செட்டிமார்கள் நாட்டில் தோன்றியிருக்கும் ஊழியன் என்கிற ஒரு பத்திரிகை "தமிழ் நாடு" பத்திரிகைக்குத் தம்பியாகத் தோன்றி இருக்கிறது. அது வரவரப்பச்சைப்பார்ப்பனப் பத்திரிகையாகப் போய்க் கொண்டிருக்கிறது. அது எதற்காக இவ்வளவு பணத்தைச் செலவு செய்து கொண்டு நடைபெற வேண்டுமோ நமக்குத் தெரியவில்லை. ஒரு வருஷகாலமாகவே அதன் பேச்சு மிகவும் கேவலமாகவே போய்க்கொண்டிருக்கிறது. அப்பத்திரிகையை ஒரு கொடும பார்ப்பனர் நடத்துகிறாரா? அல்லது பார்ப்பனரல்லாதார் நடத்துகிறாரா? என்பது . நாம் கண்டு பிடிக்க முடியாததாகவே இருக்கிறது கொஞ்சகாலமாகப் பொறுத்துப் பொறுத்து பார்த்தே முடிவில் இதை எழுதவேண்டிய நிலைமைக்கு வந்து விட்டோம என்செய்வது நடப்பது நடக்கட்டும் என்றே எழுதத் துணிந்தோம இவ்வாரம் நமக்கு சாவகாசமில்லாததால் அதைப்பற்றி விரிவாக எழுத முடியாமல்போய்விட்டது ஆயினும் இவ்விஷயத்தில் நாம் பிறகும் வருத்தமடைகிறோம் என்பதை மாத்திரம் இச்சமயம் எழுதி இதை முடிக்கிறோம்.

---

## மாயவரம் மகாநாட்டின் எதிரிகளின் சூழ்ச்சியும் திரு. வி. கலியாணசுந்தர முதலியாரின் விஜயமும்.

ஸ்ரீமான் முதலியார் அவர்கள் மாயவரம் மகாநாட்டுக்கு வந்ததும் மகா நாட்டில் அது சமயம் கூடி இருந்த சுமார் 3000 பேருக்கு மேல்பட்டுள்ள மகா ஜனங்கள் செய்த ஆரவாரத்திற்கும் அடைந்த சந்தோஷத்திற்கும் அளவு சொல்ல யாராலும் முடியாது என்றே சொல்லுவோம். ஸ்ரீமான் முதலியார் அவர்களை மாயவரம் மகாநாட்டுக்குப்போக விடக்கூடாது என்று செய்த சூட்சிகள் கொஞ்சமும் பலிக்கவே இல்லை. உண்மையான தேசபக்தர்கள் மாயவரம் மகா நாட்டுக்குப் போககூடாது என்று ஸ்ரீமான் வரதராஜுலு நாயுடு தனது தமிழ் நாடு பத்திரிகையில் எழுதி இருந்தது, யாவருக்கும் தெரியும் அதோடு தமிழ் நாடு பத்திரிகை ஏஜண்டு ஒருவர் ஸ்ரீமான் முதலியார் அவர்களுக்கு ஒரு பயமுறுத்தல் கடிதமும் எழுதி அதில் மாயவரத்திற்கு வரக்கூடாது என்றும், வந்தால் கலகம் அடிதடி மரியாதைக் குறைவு முதலியதுகள் நடக்குமென்றும், குறிப்பிட்டிருந்தார்.

இது சங்கதி ஸ்ரீமான் ஈ. வெ. ராமசாமி நாயக்கருக்குத் தெரிந்ததும் முதலியார் அவர்களுக்கு எப்படியாவது வரவேண்டும் என்றும், மாயவரத்தில் கலகமும் அடிதடியும் நடக்குமானாலும் அதற்குத் தான் ஜவாப்புதாரி என்றும் முதல் அடியைத் தான் பட்டுக் கொள்ளத் தயாராயிருப்பதாகவும், முதலியார் விளம்பரப்படுத்திய பிறகு வராவிட்டால் எதிரிகள் குற்றம் சொல்ல இடமேற்பட்டுவிடும் என்றும் சேர்த்துக்கொண்டு வற்புறுத்தி எழுதியதின் பேரில் முதலியார் அவர்கள் தைரியமாய் வரநேரிட்டது. கலகம் செய்வதாய் பயமுறுத்தி முதலியாருக்குக் கடிதம் எழுதியவர்கள் ஸ்ரீமான் பி. வரதராஜுலு நாயுடுக்கு எவ்வளவு வேண்டியவர்களோ அதைவிட கொஞ்சம் அதிகமாகவே நாயக்கருக்கும் வேண்டியவர்களாயிருந்தபடியாலும் அவர்களுக்கு உண்மையான பார்ப்பனரல்லாத ரத்தம் சரீரம் முழுவதும் ஓடிக் கொண்டும் கொதித்துக்கொண்டும் இருந்தாலும் கலகம் என்கிற எண்ணத்தையே மறந்துவிட்டு ஸ்ரீமான் முதலியார் அவர்கள் அக்கிராசனத்திலேயே தீர்மானங்களைப் பிரேரேபித்து அற்புதமாகப் பேசினார்கள். மற்றும் மகா நாட்டுக்குப் போககூடாது என்று ஜாடைமாடையாகத் தடுக்கப்பட்ட சிலபார்ப்பனரல்லாத தேசபக்தர்களும் அதை லட்சியம் செய்யாமல் தாராளமாக மகாநாட்டில் கலந்து உதவி செய்ததும் மிகவும் போற்றத்தக்கது.

மகா நாட்டில் கலவரம் நடக்கும் என்கிற தீர்மானத்தின் பேரில் லவாதைப் பொய்து செய்து பத்திரிகைகளில் எழுதத் தகுந்த மாதிரி அதற்கு தகுந்த சில நிருபர்களை அனுப்பியும் கூட மகா நாட்டில் ஒரு சிறு கலவரம் கூட நடக்காததால் அனுப்பியவர் ஏமாற்ற மடைந்து விட்டார் என்றே சொல்லவேண்டும். மற்றும் ஜஸ்டிஸ் கட்சியிடமும்

## கோயமுத்தூர் ஜில்லா பார்ப்பனரல்லாத 4-வது மகாநாடு.

கோயமுத்தூர் மகா நாட்டிற்காக நடக்கவேண்டிய காரியங்கள் எல்லாம் நடந்து வருகின்றன. ஸ்ரீமான்கள் ப. வெருவாடு செட்டியார், எம். சம்மந்த முதலியார், சி. எஸ். இரத்தினசபாபதி முதலியார், பி. இரத்தினசபாபதிக் கவுண்டர், எஸ். ஜி. வெங்கிடுசாமி நாயுடு, அருணாசலம் செட்டியார், பழனிசாமி நாயுடு முதலிய பிரமுகர்கள் அதிக ஊக்கத்துடன் வேலை செய்து வருகிறார்கள் இது வரையில் சுமார் 2500 ரூபாய் வரை மகா நாட்டிற்காக வசூல் செய்தாய் விட்டது இனியும் இரண்டு மூன்று ஆயிரம் ரூபாய் வரையில் வசூலாகக் கூடும் என்று எதிர்பார்க்கப் போகிறது. பலரின் சவுகரியத்தை உத்தேசித்து மகா நாட்டை அடுத்த மாத முதலில் வைத்துக்கொள்ளவே எல்லோரும் பிரியப்படுகிறார்கள். ஜில்லாவிலுள்ள மற்ற கனவான்களும் தயவு செய்து வேண்டிய முயற்சி எடுத்துக் கொண்டு மகா நாட்டுக்கு தாராளமாகப் பணம் உதவுவதுடன் கூட இருந்து சிறப்பாய் நடத்திக் கொடுக்க வேண்டியதும் அவர்களுடைய கடமையாகும். இது வரை பணம் கொடுத்திருக்கும் கனவான்கள் பெயர்களும தொகைகளும்.

| ஸ்ரீமான்கள் | ரூ. |
|---|---|
| வி வெரிவாட செட்டியார் | 100 |
| சி வி வி சுப்பைய செட்டியார் | 100 |
| வி எஸ் செங்கோட்டையா | 100 |
| எஸ் மீனைய செட்டியார் | 100 |
| பி எஸ் ஜி ஆண்டி சன்ஸ் | 100 |
| வி வெள்ளியங்கிரி செட்டி. | 100 |
| பி ரத்தினசபாபதி கவுண்டர் | 100 |
| எஸ் என் பொன்னைய கவுண்டர் | 100 |
| பி எஸ் சாத்தப்ப செட்டியார் | 100 |
| சி எஸ் இரத்தினசபாபதி முதலியார் | 100 |
| எ டி லக்ஷுமணசாமி முதலியார் | 100 |
| வி கோவிந்தசாமி நாயுடு | 100 |
| டி கிருஷ்ண செட்டியார் | 100 |
| பு அ பரமேஸ்வர செட்டியார் | 51 |
| ஆர் கே ஷண்முகம் செட்டியார் | 50 |
| ஆர் வெங்கட்டசாமி நாயுடு | 50 |
| அ ம நஞ்சப்ப செட்டியார் | 50 |
| அ ம ந மருதாசலம் செட்டியார் | 50 |
| ஜ துரைசாமி நாயுடு | 50 |
| பி கிருஷ்ணசாமி பிள்ளை | 50 |
| நஞ்சுண்ட கவுடர் | 50 |
| கே ஆர் மரகதம் பிள்ளை | 50 |
| கொ சுப்பரமணிய செட்டியார் | 25 |
| வி பழனிசாமி நாயுடு | 25 |
| வி எம் வி பெருமாள் செட்டியார் | 25 |
| கே எ பி பழனிசாமி செட்டியார் | 25 |
| என் எ சுந்தரசாமி செட்டியார் | 20 |
| என் ஆர் சாமிவாட செட்டியார் | 20 |
| கே வி சின்னப்ப செட்டியார் | 20 |
| சி கே பழனிசாமி செட்டியார் | 20 |
| பி எ ராஜு செட்டியார் | 20 |
| பி முத்துசாமி பிள்ளை | 20 |
| சு மு குப்புசாமி செட்டியார் | 20 |
| டாக்டர் டி எ ராஜா | 10 |
| ஆர் அண்ணாமலை செட்டியார் | 10 |

மற்றும் பல கனவான்களும் கொடுத்திருக்கிறார்கள்.

தவிர நாளது மாதம் 15தேதி ஞாயிற்றுக்கிழமை கோயமுத்தூர் ஜில்லா 4வது மகாநாட்டின் உபசாலைக் கமிட்டி கூட்டம் கூடி நிர்வாகசபை அக்கிராசனர், தலைவர் முதலியவர்களை தெரிந்தெடுக்கப்படும். எல்லா கனவான்களும் வரவேணுமாய் கோரப்படுகிறார்கள்.

---

மாயவரம் மகாநாட்டினிடமும் பாமர ஜனங்களுக்குக் கெட்ட எண்ணம் எற்படும்படி இதில் எழுதுவதற்குத் தகாத எத்தனையோ சூட்சிகள் நடந்தன ஆனால் அவைகள் ஒன்றும பயன் பெறாமல் போய்விட்டது. ஆனபோதிலும மகா நாட்டிற்கு வந்தவர்களில் பெரும பாலோர் இவைகளை நன்றாய் அறிந்து கொண்டார்களென்றே சொல்லவேண்டும் எப்படி எனில பாதிரிக்கள் நாலுபேர ஐந்து பேர் கூடின இடத்தில் எல்லாம் இந்த பேச்சுகள் தானே தவிரவேறில்லை, எனவே நமக்கும நமது சமூகத்திற்கும இருக்கும் கஷ்டத்தை இதிலிருந்து கொள்ளும்படி வேண்டுகிறோம்.

## மலாய் நாட்டில், "பிராமணீயம் என்னும் "புரோகிதவரி நீக்கி நிகழ்ந்த முதல் விவாகம்.

நம்மவர்களின் வீட்டுச் சுபா சுப காரியாதிகளில் "பிராமணீயம்" அதாவது ஜன்மச்சனி போன்ற "புரோகிதவரி" என்னும் பெரும் பேய்வாய்ப்படாது தப்பித் தாய் நாட்டில் நடந்த காரியாதிகள் நமது செவிக்கெட்டிய வரையில் ஒரு சிறிது இருப்பினும் நேரில் கண்டவைகள் ஒன்றுமேயில்லை. பல்லாண்டுகளாகப் பல்லவி பாடி வரும் நந்தாய் நாட்டின் சீர்திருத்த முன்னேற்றம் நாட்டின் விஸ்தீர்ணத்தையும் ஜனசங்கியையும, கல்வி கேள்வி யாதியவைகளின் சிறப்பையும் சீர்தூக்கிப்பார்ரு மளவில் அச்சில காரியாதிகளையும் சொல்லளவே யெனக் கொள்ளக் கிடப்பினும்;

நம்மித்திய மக்கள் குடியேறியுள்ள இம் மலாய் நாட்டில் கூறியவாறே செய்கைபாலுஞ் செய்து காட்டிய "புரோகிதவரி" என்னும பேயை இருந்த விடந்தெரியா தோட்டிய சிறந்த விவாக மொன்று "தெலுக் ஆன்ஸன்" எனும் நகரில் நிகழ்ந்ததை நேரிற் கண்டானந்தித்தேனம்.

மணமகளின் தந்தை போர இந்து மகா ஜன சங்கத் தலைவ ப. பலதரப்பட்ட தேசசஊழியத்தில் சதா ஈடுபட்டு மெய்த்தொண்டுபுரிந்து வருபவருமாகிய தைபிங் நந்நகரவாசியார் ஸ்ரீமான் மா. இரத்தினசாமி பிள்ளையவர்கள்- மணமகனின் குடும்பத்தலைவர் அவர் தஞ்சகோதிரர் பேரா இந்து சங்கத்தின் காரியதரிசியும் பொது ஜனசேவையிற் சலிப்படையாதவருமான தெலுக் ஆன்ஸன் சேனிடரி இன்ஸ்பெக்டர் ஸ்ரீமான் தி. சுப்பையா அவர்கள். குறித்த விவாக வைபவம் சென்ற (22-4-27) வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கும் 3½ மணிக்குமிடையே 'பார்ப்பனப்புரோகித' மின்றி தமிழ் ஓதுவா ரொருவரையும, ஸ்ரீமத் சுவாமி அர்ப்புதானந்தரவர்களையும், பேரா இந்து மகாஜன சங்கப் பொதுக் காரியதரிசி ஸ்ரீமான் ஐயாரு அவர்களையும் முற்கொண்டு ஜாதி பேதம் தீண்டாமை என்பதை அறவேயொழித்த பல இந்தியப் பெருமக்களின் திருக்கூட்டத்தினிடையே முறையிற் சிறிதும் பிழையாது சிறப்பாக நிறைவேறியது. அச்சமயம் மணமக்களுடையவும் அவர்தம் குடும்பத்தாருடையவும், மணப்பந்தலில் கூடியிருந்தாரிற் பெருமபாலருடையவும் ஆடைகள் முழுதும பரிசுத்தக் கதராடையாகவே யிருந்ததானது குறிப்பிடத்தக்க தொன்றும்

விவாகம் முடிந்த 9-ம் நாள் அதாவது 30-4-27 சனிக்கிழமை மாலை 7-மணி ரெயிலில் தைபிங்குக்கு மணமக்களை அழைத்து வந்தபோது, மணமகளின் தந்தை ஸ்ரீமான் மா இரத்தினசாமி பிள்ளையவர்களைத் தலைவராகவும் டிரஸ்டியாகவும் கொண்டுள்ள தைபிங் இந்து தேவாலய சபையின் அங்கத்தினர்கள் மணமக்களை ரெயில்வே ஸ்டேஷனிலிருந்தபடியே ஸ்ரீமாரியம்மன் தேவாலயத்திற்கழைத்து வந்து விசேஷ அபிஷேகாதிகள் செய்வித்து மாலை சூட்டி சுமார் 300 பேர்களில் அதிகம் கூடியிருந்தவர்களுக்கும் பேணிலுமினிய சிற்றுண்டியளித்துச் சிறப்பித்த பெருமையை உள்ளபடி எழுத இங்கு இடம் பெறாதென அஞ்சுகின்றோம்.

இத்திருமணத்தைத் தமிழுலகிற் கோர் உத்தம வழி காட்டியாகச் செய்து கீர்த்தியை நிலை நாட்டிக் கொண்ட பேரா இந்து மஹா ஜன சங்கத்தின் அங்கத்தினர்களும், ஸ்ரீமான்கள் மா. இரத்தினசாமி பிள்ளையவர்கள், தி. சுப்பையா அவர்களும, இத்திருமணத்தைத் தமது மனமபூர்வம அங்கீகரித்துக்கொண்ட கலைவல்ல மணமக்களும் எல்லாம் வல்ல ஒரு முதற்றனிவனின் இன்னருளால் தேகாரோக்கிய திடகாத்திரத்துடன் நீடூழியிருக்கப் பிரார்த்திப் போமாக

சுபம! சுபம்!! சுபம!!!

---

## அப்பய்யாவின் மரணம்

ஸ்ரீமான் ஈ. வெ. ராமசாமி நாயக்கர் தங்கை மகன் ஸ்ரீமான் அப்பய்யா 2, 3, மாதம் காயலாவாயிருந்தும் இம் மாதம் 12 தேதி வியாழக்கிழமை பிற்பகல் நாலரை மணிக்கு இறந்துபோனார் அவருக்கு வயது 28 சமீபத்தில் 3, வருஷங்களுக்கு முன்பு தான நாயக்கர் வீட்டில் கல்யாணம் நடந்தது

1922-ல் ஸ்ரீமான் நாயக்கருடன் மறியலில் ஜெயிலுக்கு போயிருந்தவர் "குடி அரசு" பத்திரிகை ஆரம்பித்த காலத்தில் அதற்கு பதிப்பாளராகவும் வெளியிடுபவராகவும் இருந்தவர்.

வியாழக்கிழமை இறந்து போனார் வெள்ளிக்கிழமையே பார்ப்பன சம்மந்தமே இல்லாமல் எல்லா சடங்குகளும் நடந்து முடிந்து விட்டது.

---

## ஸ்ரீமான் நாயக்கர்.

15 தேதி கோயமுத்தூருக்கும் 16 தேதி கள்ளிக்கோட்டைக்கும் போய்விட்டு 17 தேதி வருவார் 18 தேதி இரவு வண்டியில் ஈரோட்டிலிருந்து மதுரை ஜில்லா குண்டத்தூரில் நடககும் வெலமா நாயடு சமூக மகா நாட்டிற்கு தலைமை வகிக்கப் போவார் 20 தேதி மாலை அல்லது 21உ ஈரோடு வருவார் மற்றபடி இமமாதமுடிவுவரையில் வேறு எங்கும் போகமாட்டார்.

# மாயவரம் மகாநாடுகள்

## நிறைவேறிய தீர்மானங்கள்

### பிராமணரல்லாதார் மகாநாடு

(1) பிறப்பினால் உயர்வு தாழ்வு என்று ஏற்படுத்திக்கொண்டிருக்கிற வழக்கமானது நாட்டின் முன்னேற்றத்திற்கும் சுயராஜ்ஜியத்துக்கும் தடையாக இருப்பதால் அந்த ஜாதி வித்தியாசத்தை விட்டுவிட வேண்டுமென்று பார்ப்பனரல்லாதாரைக் கேட்டுக் கொள்ளுவதுடன் கலியாணங்களிலும் மற்றச் சடங்குகளிலும்பார்ப்பனக் குருக்களை வைத்து நடத்தக்கூடாதென்றும் தாழ்த்தப்பட்ட வகுப்பினர்களுக்குச் சமுதாய உரிமை கொடுக்க வேண்டுமென்றும், கோவில்களில் சென்று கடவுள் வழிபாடு செய்யவும் பொது வீதிகளையும் குளம் கிணறுகளையும் எல்லா ஜனங்களும் உபயோகப்படுத்த அனுமதிக்க வேண்டுமென்றும் இம்மகாநாடு கருதுகிறது

(2) பொறுப்புவாய்ந்த அரசாங்கத்துடன் மாகாண சுய ஆட்சி உடனேயளிக்கப்பட வேண்டுமென்றும் இந்திய அரசாங்கத்தில் பொறுப்பு ஏற்பட வேண்டுமென்றும இம்மகாநாடு தீர்மானிக்கிறது.

(3) இப்பொழுது உத்தியோகங்கள் ஒரே ஜாதியாரின் கையில் அகப்பட்டிருப்பது இராஜ்யத்திற்கும் தேச முன்னேற்றத்திற்கும் கெடுதல் ஏற்பட்டிருப்பதனால் தேசத்தின் அபிவிருத்தியை முன்னிட்டு வருகிற 5 வருடம் வரையில் உத்தியோகங்களுக்கு ஆட்களை நியமிக்கையில் பார்ப்பனர்களைத் தவிர்த்துப் பார்ப்பனரல்லாதாரையே நியமிக்கவேண்டும் என்றும், நமது தென்னாட்டு நலவுரிமைச் சங்கத்தார் வேண்டிய காரியங்களைச் செய்யவேண்டும் என்றும் இம்மகாநாடு கருதுகிறது.

(4) பார்ப்பனரல்லாதாரின் இயக்கத்தின் நோக்கத்தையும்கருத்துக்களையும் வற்புறுத்திக்கூடிய விரைவில் இந்திய பொறுப்பு வாய்ந்த அரசாங்கத்தைப்பெறுவதற்கான வழிகளை வகுப்பதற்காக நாட்டிலுள்ள சட்டவரம்புக்குட்பட்ட அரசியல் வாதிகளில் மகாநாடு ஒன்றைக் கூட்ட வேண்டியதற்கான முயற்சியை சென்னை தென்னிந்திய நலவுரிமைச்சங்கம் செய்ய வேண்டு மென்று இம மகாநாடு சிபார்சு செய்கிறது.

(5) மேட்டூர் நீர்ப்பாசன திட்டம் சிக்கனமாக ஏற்படாததால் அதை இம்மகாநாடு கண்டிக்கிறது. புதிதாக சாகுபடிக்கு வரும் நிலத்திற்கு ஏற்படுத்தும் அதிக வரியை பலமாகக்கண்டிப்பதுடன் அந்தஉயர்ந்த வரியை அந்தநிலக்காரர்கள் கொடுக்கமுடியாதென்றும் கூறுகின்றது.

(6) தமிழர்களின் பண்டைக்காலகலைகளை அபிவிருத்தி செய்வதற்காக கூடிய விரைவில் தமிழ் பல்கலைக்கழகம் ஸ்தாபிக்க வேண்டும்.

(7) இம்மகாநாடு பிராமணரலலாத சமூகத்தாரனைவரும் அந்நிய நாட்டுத் துணியை அறவே ஒழித்து நம்மக்களால் நூற்று நெய்யப்பட்டுள்ள கதர் துணியைய உடுத்த வேண்டுமென்றும, பட்டினிகிடந்து வருந்தும் லட்சக்கணக்கான ஏழைகள் தங்கள் ஓய்வு நேரங்களில் ராட்டினத்தில் நூற்கும வேலைக்குப் பார்ப்பனரல்லாதார் தங்களுடைய அநுதாபத்தைக் காட்டவேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறது.

(8) நாட்டுப்புறங்களை ஏற்கனவே உள்ளபடி செய்வதற்காகக் கூட்டுறவுச் சங்க இயக்கத்தில் பார்ப்பனரல்லாத சங்கங்களும் தலைவர்களும் மிக்க ஊக்கம் எடுத்துக்கொண்டு கிராமங்களில் ஐக்கிய நாணயச் சங்கம் ஸ்தாபிக்க வேண்டுமென்று இம்மகாநாடு கருதுகின்றது.

(9) பிராமணரல்லாதார் இயக்க சம்மந்தமாக பத்திரிகைகள் அவசியம் வேண்டியதனாலும் பிராமணப் பத்திரிகைகளை எதிர்ப்பதற்காகவும் நம் பத்திரிகைகளாகிய ஜஸ்டிஸ், திராவிடன், சமதர்சனி, குடி அரசு ஆகியவைகளை ஆதரிக்கும் படி கேட்டுக்கொள்ளுகிறது.

(10) நமது தேசத்திலுள்ள விவசாயிகளும் தொழிலாளர்களும் மிகவும் வருந்தத்தக்க நிலையில் இருக்கின்றபடியால் அவர்களையெல்லாம் சேர்த்து அவர்களின் சிக்கன நிலைமையில் அபிவிருத்தி செய்யவேண்டிய வழிகளை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று சிபார்சு செய்கின்றது

(11) ஜனங்களின் சிக்கனமுறையை அபிவிருத்தி செய்வதன் பொருட்டுக்குடியை முற்றும் ஒழிக்க தேசம் வேலை செய்ய வேண்டுமென்று இம்மகாநாடு அபிப்பிராயப்படுகின்றது.

(12 செட்டில்மெண்டு கொள்கைகள் உள்ள ரெவினியூ செட்டில்மெண்ட் மசோதாவென்று சட்டசபையில் கொண்டு வர வேண்டுமென்று இம்மகாநாடு கருதுகிறது. ஆனால் அண்மையில் வெளியிடப்பட்டநகல் மசோதாவில் கண்டுள்ள விஷயங்கள் சரியானதாக இல்லாமையால் அதை ஆதரிக்க முடியாமலிருப்பதற்காக வருந்துவதாகவும் இம்மகாநாடு தீர்மானிக்கிறது.

(13) இச்சில்லாவின் பல பாகங்களிலும் ஜஸ்டிஸ் கட்சியின் கொள்கைகளை எடுத்துக் கூறவும் கிராமாந்தரங்களில் பிரசாரம் செய்யவும் 1927-ம் வருடம் ஜூலை மாத முடிவிற்குள் தென்னிந்திய நலவுரிமைச் சங்கக் கிளைக்கு 5000 அங்கத்தினர்களைச் சேர்ப்பதென்றும் கட்சி நிதிக்காக ரூ 5000 வசூல் செய்வதென்றும் இம்மகாநாடு தீர்மானிக்கிறது.

14) இமமகா நாட்டுக்குத் தலைமை வகித்து வெகு திறமையாக நடத்திவைத்த தலைவருக்கு மனமார்ந்த நன்றியறிதலைச் செலுத்துகிறது.

### சமரச சன்மார்க்க மகாநாடு

1. பிறப்பில் உயர்வு தாழ்வு கருதி வந்ததை இனி விட்டொழித்துச் சமரசத்தை வளர்க்குமாறு இம்மகாநாடு கேட்டுக்கொள்ளுகிறது.

2. பிறப்பினால் உயர்வுபற்றிக் குருக்கள்மார்களை அமைத்துக் கொள்வதை நீக்கி இனி கல்வி, அறிவு, ஒழுக்கத்திற் சிறந்த நன்மக்களை நியமனம் செய்ய இம்மகாநாடு கேட்டுக் கொள்கிறது.

3 கோயில்களும் மடங்களும் சாதி முறைபற்றி நடந்துவருவதை இமமகாநாடு மறுப்பதோடு, சமயவழிபற்றி நடத்த வேண்டுமெனக் கேட்டுக்கொள்ளுகிறது.

### இளைஞர் மகாநாடு

இம்மகாநாடு திராவிடன் ஆசிரியர் திரு. வாளர் ஜனகசங்கர கண்ணப்பர் அவர்கள் தலைமையின்கீழ் நடைபெற்றது. அம்மகாநாட்டில் நிறைவேறிய தீர்மானங்கள் வருமாறு:—

ஸ்ரீமதி அலர்மேலுமங்கைத் தாயாரம்மாள் சென்னையில் கௌரவ மாஜிஸ்டிரேட்டாக நியமிக்கப் பட்டதற்காக இம்மகாநாடு சந்தோஷிக்கிறது.

நமது வாலிபர்கள் கிராமந்தோறும் சென்று கிராமவாசிகளுக்கு நமது பத்திரிகைகளைப் படித்துக் காட்டி நமது இயக்கத்தைப்பலப்படுத்தப் பிரசாரம் செய்யவேண்டுமென இம்மகாநாடு தீர்மானிக்கிறது.

தினந்தோறும் நாம் சென்று "ஹிந்து" "சுதேசமித்திரன்" "சுயராஜ்யா" பத்திரிகைகளிலுள்ள கெடுதல்களை, கிராம வாசிகளுக்கு எடுத்துச் சொல்லி அப்பத்திரிகைகளை பஹிஷ்கரிக்க வேண்டிய பிரசாரவேலை செய்ய வேண்டுமென இம்காநாடு தீர்மானிக்கிறது.

பிராமணரல்லாச் சிறுவர் சிறுமிகள் சகலருக்கும் கட்டாயமாய் உயர்தரக் கல்வி கொடுக்கப்பட வேண்டுமெனப் பெற்றோர்களை இம்மகாநாடு வற்புறுத்திக் கேட்டுக் கொள்ளுகிறது.

பிராமணரல்லாத மாணவர்களுடைய கல்வியபிவிருத்திக்குப் பிராமண உபாத்தியாயர் தடையாயிருப்பதால், ஜில்லா போர்டு, தாலுக்கா போர்டு, முனிஸிபாலிட்டி முதலிய ஸ்தல ஸ்தாபனங்களின் ஆளுக்கைக்குட்பட்ட கல்விச் சாலைகளில் பிராமணரல்லாத உபாத்தியாயர்கள் அதிகமாய் நியமிக்கப்படவேண்டுமென இம்மகாநாடு வற்புறுத்திக் கேட்டுக் கொள்ளுகிறது.

பிராமணப் புரோகிதர்களை பகிஷ்கரிக்கும்படி பிரசாரம் செய்ய வேண்டுமென இளைஞர்களை இம்மாஹா நாடு வற்புறுத்திக் கேட்டுக்கொள்ளுகிறது.

திராவிட இளைஞர்கள் பலரும் இந்தக் கோடைகால விடுமுறையில் கிராமம் கிராமமாகச் சுற்றுப்பிரயாணம செய்து "திராவிடன்" "ஜஸ்டிஸ்," "குடியரசு," "சமதரிசினி" முதலிய திராவிடப் பத்திரிகைகளுக்குச்சந்தாதார்கள் சேர்த்துவரவேண்டுமென இமமஹா நாடு வற்புறுத்திக் கேட்டுக் கொள்ளுகிறது.

சென்னைச் சட்டசபையில் ஸ்ரீ. எஸ். சத்தியமூர்த்தி கொண்டுவந்த சர்வ கலாசாலை சட்ட திருத்த மசோதாவை தைரியமாக எதிர்த்த திவான் பஹதூர் குமாரசாமி ரெட்டியார், திவான் பஹதூர் எம் கிருஷ்ணநாயர், ஸ்ரீ. எ. இராமசாமி முதலியார் இவர்களை இம்மஹா நாடு போற்றுகிறது.

பின்னர் வாலிபர்களுக்குத் தேகப்பயிற்சி கொடுக்க ஏற்பாடு செய்யவேண்டுமென்றும் தமிழ்நாட்டுக்கு ஒரு தமிழ்வாசகசாலை ஏற்படுத்தவேண்டுமென்று இளமைமணத்தை யொழித்தல் வேண்டுமென்றும் தீண்டாமையை நீக்கிச் சமத்துவம் உண்டாக்க வேண்டுமென றும் மற்றுஞ்சில தீர்மானங்களும செய்யப்பட்டன.

(6ம் பக்கத் தொடர்ச்சி.)

ஸ்ரீமான்கள் ஜே. என் ராமநாதன் தண்டபாணிபிள்ளை முதலியவர்கள் கோவிலுக்குப் போய் தாங்களே நேரில் சுவாமி தரிசனம் செய்யப் போவதாய் கூறினார்கள். தலைவர் உபன்யாசம் முடிந்ததும் சமரச சன்மார்க்க மகாநாட்டை மறுநாள் காலை 8 மணிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

இரண்டாம் நாள் நடவடிக்கை காலை.

மறுநாள் காலை எழுமணிக்கே மகாநாடு கொட்டகையில் ஜனங்கள் நிறைய கூடி விட்டார்கள். சன்மார்க்க மகாநாட்டு அக்கிராசனர் ஸ்ரீமான் கலியாணசுந்தர முதலியார் குறிப்பிட்ட காலத்திற்கு வரச் சற்று தாமதமாகி விட்டதால் பத்து மணிக்கு, இளைஞர்கள் மகாநாடு ஆரம்பிக்கப்பட்டு விட்டது.

இளைஞர்கள் மகாநாடு.

இளைஞர்கள் மகாநாடானது காலை எட்டரை மணிக்கு ஆரம்பித்ததும் இளைஞர் மகாநாட்டு உபசாரனை அக்கிராசனர் பெரியான ஸ்ரீமான் கனகசபை நாடார் அவர்கள் தனது உபசாரனைப் பிரசங்கத்தைப் படித்தவுடன் ஸ்ரீமான் கண்ணப்பர் அவர்களை தலைவராகப் பிரேரேபிக்க ஆலோசித்து அக்கிராசனத் தமரச் செய்தவுடன் அவர் தலைமை உபந்நியாசத்தை ஒரு மணி நேரம் வாய் மொழியாகவே பேசினார். இது முடிந்ததும் இம்மகாநாடு சார்பாக பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

பிற்பகல்

பிற்பகல் 3-மணிக்கு பார்ப்பனரல்லாதார் மகாநாடு கூடியதும் அரசியல் சம்பந்தமாகவும் சமூக இயல் சம்பந்தமாகவும் பல தீர்மானங்கள் சுயமரியாதை சம்பந்தமாகவும் பல தீர்மானங்கள் நிறை வேற்றப்பட்டன. இரவு எழுமணிக்கு தீர்மானங்கள் முடிவடைந்ததும ஸ்ரீமான்கள் பனக்கால் அரசரும் சர்பதளவும் பார்ப்பனரல்லாதார் இயக்கம் சம்பந்தமாக பேசினார்கள். வரவேற்பு அக்கிராசனர் ஸ்ரீமான் சின்னையா பிள்ளை.

ஸ்ரீமான் சின்னையா பிள்ளை ஒரு மணி நேரம் தான் ஆதியில் ஒத்துழையாமையில் இருந்ததும், அதன் மூலம் ஜெயிலுக்குப் போனதும் காங்கிரஸ் தீர்மானத்துக்கு விரோதமாய் கூட ஒத்துழையாமை நிலை நிருத்த தானும் ராமசாமி நாயக்கரும் எஸ் ராமநாதனும் பாடுபட்டதும் கடைசியாகப் பார்ப்பனர்கள் சூழ்ச்சி செய்து ஒத்துழையாமையை ஒழித்து விட்டு காங்கிரசையும் பார்ப்பனர்கள் தயவசப்படுத்திக் கொண்டு பார்ப்பனர் அல்லாதார் செய்த தியாகம், தொண்டு, முதலிய பலன்களைப் பார்ப்பனர்களே அனுபவித்துக்கொண்டு தங்கள் வகுப்பாரை பட்டம் உத்தியோகம் முதலியதுகள் அடைந்து அதன் மூலம் பார்ப்பனரல்லாதாருக்குக் கெடுதி செய்து வருவதையும் குடி அரசின் மூலம் அறிய நேரிட்டதென்றும் குடி அரசு பத்திரிகை இல்லாதிருந்தால் இந்தப் புரட்டுகள் தனக்கு தெரிந்திராதென்றும் ஆரம்பத்தில் தான் ஸ்ரீமான் ஈ.வெ. ராமசாமி நாயக்கரிடம் அபிப்பிராயம் பேதம் கொண்டிருந்ததாயும் குடி அரசையும் திராவிடனையும் சரியாகப்பார்த்தபிறகே தனக்கு உண்மை விளங்கிற்றென்றும் அதற்குமுன் ஜஸ்டிஸ் கட்சி ஆசாமிகளை பார்ப்பதே பாவம் என்று நினைத்திருந்த தான் இப்போது அக்கட்சிதான் நமது மக்களுக்குச் சுயமரியாதை அளித்து முன்னுக்கு கொண்டுவருவது என்று முடிவாய் எண்ணி இருப்பதாகவும் அதனாலேயேதான் இம்மகாநாடு கூட்டத்தான் முன்வந்ததாகவும் இதற்கு விரோதமாய் இந்த ஜில்லா பார்ப்பனர்களுக்கும் மற்றும் அவர்களது அடிமைகளும என்ன சூட்சியோ செய்தும் ஒன்றும் பயன்பட வில்லை என்றும் மகாநாட்டை நடத்த முக்கிய காரியஸ்தர் ஸ்ரீமான் S V லிங்கம் பிள்ளை என்றும், மற்றபடி உழைத்தவர்கள் எஸ். நடராஜ பிள்ளை குடும்பத்தாரும் ப. சுப்ரமணியபிள்ளை, ராஜதுரை செட்டியார் முதலியவர்களே என்றும் இதற்கு பக்க பலமாயிருந்துதது ஸ்ரீமான் பன்னீர் செல்வம் அவர்கள் என்றும் தங்கள் எல்லோருக்கும் இவ்வளவு ஊக்கமும் உர்ச்சாகமும் கொடுத்த ஈ. வெ. ராமசாமி நாயக்கரும் குடி அரசும் என்றும் விஸ்தாரமாகப் பேசினார். பிறகு திருநெல்வேலி ஸ்ரீமான் ஆவுடையப்ப முதலியாரவர்கள் வந்திருந்தவர்கள் சார்பாக வந்தன மளிக்க முடிவாக தலைவர் கிருஷ்ண நாயர் முடிவுரை சொன்னதும் இரவு 10 மணிக்கு மகாநாடு இனிது முடிந்தது.

## ஸ்ரீ வரதராஜுலுவுக்கு ஒரு மறுப்பு

V. P. K. காயாரோகணம் பிள்ளை,
நாகபட்டணம்.

குடி அரசு ஆசிரியர், அவர்கட்கு,

ஐயா, கீழ்கண்ட விஷயத்தை தங்கள் பத்திரிகையில் பிரசுரிக்க வேண்டுகிறேன்.

மே-௴ 5-௳ வியாழக்கிழமை 'தமிழ்நாடு' பத்திரிகையில் பிராமணரல்லாதார் மகாநாடு ஸ்ரீ வரதராஜுலுவுக்கு விண்ணப்பம் என்று தலையங்கமிட்டு பிரசுரித்திருக்கும் பாகத்தில் பல மெம்பர்கள் மேற்படி பத்திரிகையில் அந்த விண்ணப்பம் காண்பித்துக் கேட்டார்கள். எனக்கு ஒன்றுமே தெரியாது. 63 மெம்பர்கள் கையெழுதியிட்டிருப்பதாக பிரசுரித்திருப்பதால் யாரேனும் பொய்யாகயெழுதி அனுப்பி இருக்கக்கூடும், யாரென்று விசாரியுங்கள் என்று சொன்னேன். மெம்பர்கள் பலரிடம் விசாரித்ததும் ஒருவரும முதலில்லையென்று சொல்லி விட்டார்கள். ஆகையால் 5-௳ வெளிவந்த விண்ணப்பம் முற்றிலும் பொய் என்றும் நான் கையெழுத்து செய்யவில்லை என்றும் பகிரங்கமாய் தங்கள் பத்திரிகையில் பிரசுரிப்பதோடு மேற்படி வியாசம் எழுதியவர்கள் கண்டுபிடிக்க வேண்டியிருப்பதால் மேற்படி விண்ணப்பத்தை உடனே எனக்கு அனுப்புமாறு கோருகிறேன். திரு வரதராஜுலு நாயுடு அவர்களின் அரசியல் கொள்கை இன்னதென்றே ஒருவரும் கண்டுபிடிக்க முடியாத நிலைமையில் இருப்பதாலும், அவருடைய கொள்கைகளும திட்டங்களும தினமிருமுறை மாறிவருவதாலும் நான் அவரது வரவை அவ்வளவு அவருடன் எதிர்பார்க்க நியாயமில்லை என்பதையும் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

வி. பி. கே. காயாரோகணம் பிள்ளை.

## கதர் நிர்வாகிகளுக்கு ஒரு விண்ணப்பம்.

ஈரோட்டிற்கு ஒரு சுத்தக் கதர் வஸ்திராலயம் தேவையென்பது யாவருக்கும் தெரிந்ததே. அப்படி ஒரு வஸ்திராலயம் இங்கு இல்லாமையால் ஈரோடு வாசிகளுக்கு, சிறப்பாக எப்பொழுதும் கதரேதான் அணிவது என்ற விரதம் கொண்டவர்களுக்கு வெகு கஷ்டத்தை உண்டு பண்ணி விடுகிறது. கதர் போர்ட் ஆபிசில் கதர் கிடைக்கும் என்று சொல்லிக் கொள்ளப்பட்டாலும், அவர்கள் பொது ஜனப்பிரதிநிதிகள் என்றும் பொது ஜனங்கள் பணத்தில் சம்பளம் வாங்குகிறோம் என்று எண்ணாமல் தர்மத்திற்குத் துணி கொடுக்கும் கடையைப்போல் தங்களுக்கு இஷ்டமான போது கடை திறந்தும், மூடியுமாக இருக்கிறார்கள். அவசரமான காரியங்களுக்கும், தேவைகளுக்கும், கதர் கிடைப்பது வெகு கஷ்டமாய்ப்போகிறது. இதனால் அநேகர் நம்பி ஏமாந்து தங்கள் விரதம் கெட நேரிடுகிறது. இத்தியாதி கஷ்டங்களைக் கவனித்து கதர் நிர்வாகிகள் என்போர்கள் ஈரோட்டில் கூடிய சீக்கிரம் ஒரு கதர் வஸ்திராலயத்தை ஸ்தாபித்து பொது மக்களுக்கிருக்கும் கஷ்டத்தைப் போக்கி சாதாரணமாகக் கிடைக்கும்படி செய்வார்கள் என எதிர்பார்ப்பதாக ஈரோடு ஸ்ரீமான் மு. ராமசாமி நாயக்கர் அறிவிக்கிறார்.

## லாட்டரி விஷயம்.

அருப்புக்கோட்டை "நாடார் குல மித்திரன்" க்ஷேமநிதித் தர்மப்பண்டு லாட்டரிக்குக் குறிப்பிட்ட 4-5-27ல் கவுண்ட்டர் பாயில்களும் பணங்களும் பல வந்து சேராமையால் அவைகளை எதிர்பார்த்து 11-5-27 தேதியில் சேர்ந்தவரையும் பிரைஸ் எடுப்பதென்று தீர்மானித்து எல்லாம் ஒழுங்கு பண்ணி பிரைஸ் நடந்து கொண்டிருக்கிறது.

எல்லாப் பிரைஸ்களும் எடுதது முடிந்தவுடன் பிரைஸ் ஜாப்தா தயார் செய்து புஸ்தகம் விற்றனுப்பிய கனவான்களுக்கெல்லாம் போஸ்டு மூலம் அனுப்பிவைக்கப்கூடும் மற்றவர்களுக்கும் பிரைஸ் ஜாப்தா வேண்டுமானால் 2 அணா ஸ்டாம்பு அனுப்பிப்பெற்றுக்கொள்ளலாம் என்று "நாடார் குல மித்திரன்" பத்திராதிபர் எழுதுகிறார்.


## மனமறி நூல்

ஒருவர் மனதில் நினைத்ததை இன்னதென்று தெளிவாய்க்கூறும் அருமையான ஆரூட சாஸ்திரம். வடமொழி நூலை ஆதாரமாகவுடையது.

## ஜோதி சாஸ்திரம்

உபாத்தியாயரின்றி 30, நாளையில் ஜோதிஷம் கற்கலாம். எல்லா ஜாதகங்களுக்கும் பலன்கள் சொல்லக்கூடும். பஞ்சாங்கமின்றி எந்த ஜாதகமும் கணிக்கலாம். விலை ரூபாய் ஒன்று

மு. வடிவேல் செட்டி,
110, ஈஸ்வரன் தர்மராஜா கோவில் வீதி
புதுச்சேரி.

4-ம் பக்கத் தொடர்ச்சி.

ஆதரிக்கக் கூடிய பார்ப்பனரல்லாத பத்திரிகைகளையும் நாம் பரவச்செய்யவேண்டும்.

### முடிவுரை

சகோதரிகளே! சகோதரர்களே!!

நான் நீண்ட நாழிகை பேசி வீணாக உங்களைக் காக்க வைக்க விரும்பவில்லை. பின்னால் நீங்கள் கேட்கப்போகும் நமது தலைவரின் பிரசங்கத்திற்கும் மற்றும் பல காரியங்களுக்கும் உள்ள நேரத்தை நான் எடுத்துக் கொள்ளவில்லை. உறுதியாகச் சில வார்த்தைகள் கூறி எனது விரிவுரையை நிறுத்திக்கொள்ளுகின்றேன்.

"சொல்லுதல் யார்க்கும் எளிய
அறிவாம்
சொல்லிய வண்ணம் செயல்"

என்று நமது பொய்யா மொழியாரே புகன்றிருக்கின்றார். நாம் இம்முதுரைக்கு இலக்காகாமல் சொல்லுவதைச் செய்கையிற் காட்டவேண்டும். செய்கையில் ஒன்றுமில்லாமல் வீணாக இத்தகைய கூட்டங்களைக் கூட்டிப் பொருளைச் செலவு செய்துவிட்டுப் போவதனால் யாதொரு பயனும் விளையப்போகிறதில்லை. நாம் இன்று முதல் நமது கொடியை ஒவ்வொரு கிராமந்தோறும், ஒவ்வொரு வீடு தோறும் சென்று நமது ஒவ்வொரு ஆண், பெண் மக்களிடத்திலும் சுயமரியாதை இயக்கத்தின் உண்மையைக்கூற வேண்டுகிறேன். பிறவியினால் உயர்ந்தோர் என்ற அகம்பாவம் ஒழிய வேண்டும். மோட்சம், நரகம் என்ற சொற்களால் நம்மை அடக்கி வைத்திருக்கின்ற புரோகிதக் கொடுமையை ஒழிக்க வேண்டும். ஒவ்வொருவரும் சுதந்திர வீரர்களாக விளங்க வேண்டும். குறைகளை நிறைவேற்றுவதற்குரிய சிறந்த வழியை இம்மகாநாடு தீர்மானங்களில் காட்டுமாறு உங்களையும் தலைவர்களையும கேட்டுக் கொள்ளுகிறேன்.

அன்பர்களே!

இவ்வளவு நேரம் எனது சொற்களைப் பொறுமையுடன் கேட்டுக்கொண்டிருந்த உங்கள் அனைவருக்கும் எனது தாழ்மையான வந்தனத்தைச் செலுத்துகின்றேன்.

நாங்கள் உங்களுக்கு உண்டி, உறைவிடம் முதலிய வசதிகளைச் செய்து வைக்க வேண்டிய பணியில் தவறி நின்று அவைகள் குறைவாயிருப்பினும் பொறுத்துக் கொள்ளுமாறு மீண்டுமொருமுறை வணக்கத்துடன் கேட்டுக்கொள்ளுகிறேன்.

வேற்றுமை ஒழிக! ஒற்றுமை நிலவுக!!

---

## சமரச சன்மார்க்க மகாநாட்டு உபசரணை அக்கிராசனர் ஸ்ரீமான் K. C, ராஜதுரை செட்டியார் அவர்களின் வரவேற்பு உபந்நியாசம்

---

தமிழன்பர்களே! தமிழ்த் தாய்மார்களே!!

இன்று இங்கு குழுமிய பெருங் குடிமக்களாகிய நுங்கட்கும், இச்சமரச சன்மார்க்க மகாநாட்டிற்குத் தலைமை தாங்கி இனிய சொற்பொழிவாற்றி மகிழ்விக்க, ஒப்புக்கொண்டு இவண் எழுந்தருளிய தலைவரவர்கட்கும், சமரச சன்மார்க்க வரவேற்புக் கழகத்தார்கள் சார்பாக நன்றி செலுத்துகின்றேன்.

சமரச சன்மார்க்க சமய வொழுக்கத்தினை அருளுடைய பல்லறிஞர்களால் அறிவுறுத்திச்சென்றதனை ஆங்காங்குள்ள அன்பர்கள் சமரசசன்மார்க்கப்பெயர் தாங்கிய கழகங்கள் கண்டு, சமரசசன்மார்க்க மெய்ஞ்ஞானத்தைப் பரப்பி வளர்த்து வரும் போதிலும், தமிழ் மக்கள் சமரச சன்மார்க்க வொழுக்கங்கொண்டு இன்புறுங்காலம் தோன்றியுள்ளதென்றே நினைக்கின்றேன்.

சமரச சன்மார்க்க வொழுக்கினைப் பண்டைத் தமிழ் மக்கள் மேற்கொண்டு இன்புற்றவர்களென்பதனை, பழந்தமிழ் நூல்களாகிய தொல்காப்பியம் முதலான நூல்களில் பார்க்கக் காணலாகும்.

பழந்தமிழ்க்குடியில் தோன்றிய நம் முன்னோர்கள் கொண்ட கடவுள் கொள்கை, ஒழுகலாறு யாவையென ஆராயுமிடத்துகட்டற்று நடந்து நின்ற பரம்பொருள், தத்துவம் கடந்த தனிப்பொருள் என்பதாகிய கந்தழியையே கடவுளாகக் கொண்டுவணங்கினார்கள். இன்னும் இயன்மொழியாந்தமிழ் மொழியின்பாலினையுண்டு, மாறுவிளைவையும் அழியா வழக்கும் முன்றும் நறுமணமும் கொண்டுள்ள இயற்கைக் கடவுளையே வழிபட்டு வந்தார்கள் என்பதை நம் பழந்தமிழ் நூல்கள் அறிவிப்பது அந்நூலாராய்வார்க்கு நன்கு புலனாகும். இம்மார்க்கமே தமிழர்கள் சமரச சன்மார்க்கமாகும். இவ்வியற்கைக் கடவுளை வழிபடுவதில் எம்முறைகளிலும் தமிழர்கள் அக்காலத்தில் உயர்வு, தாழ்வு கொண்டொழுகினார்களில்லை. இம்முறையையே பிற்காலத்துத்தோன்றிய உண்மைப் பெரியார்களும் தத்தம் அருள் மொழிகளாலும், செயல்களாலும் நன்கு தெரிவித்துப் போந்துள்ளார்கள்.

### சமரச சன்மார்க்கம்

நாம், தஞ்சை ஜில்லா பார்ப்பனரல்லாதார் மகாநாட்டில் இச் சமரச சன்மார்க்க மகாநாடு நடத்துவதின் பொருளை பலவாறு எண்ணலாம். யான், இம் மகாநாட்டிலும் உண்மைப் பொருளை உணருமிடத்து நம், தமிழ் மக்கள் கடவுள் வழிபாட்டிலும் ஒழுகலாற்றிலும் எவ்வாறு ஒழுகினார்களோ அதனை நிலை நாட்டத்தக்க மாபெருங்கூட்டமாகக் கருதுகின்றேன்.

கடவுளை யடையும் முறையிலும், கடவுளைப் பூஜிக்கும ஒழுக்கமுறையிலும், அன்பு அருள், அடக்கம், பொறை, வாய்மை நல்லொழுக்கம் முதலியனவற்றில் உயர்வு, தாழ்வு கண்டார்களே யன்றி, பிறப்பு பற்றி உயர்வு, தாழ்வு கண்டார்களில்லை. சைவசமயாச்சாரியர்களும். ஆழ்வாராதிகளும், திருவள்ளுவர், தாயுமானார், பட்டினத்தார், இராமலிங்கசுவாமிகள், புத்தர், கிருஸ்துநாதர் நபி நாயகங்கள் முதலிய பெரியார்களும் நன்கு அறிவுறுத்தியுள்ளார்கள்.

அந்தணராகிய திருஞான சம்பந்தரும், பாணராகிய திருப்பாணாழ்வாரும், வேளாளராகிய அப்பரும், அந்தணராகிய அப்பூதியடிகளும் அரங்கநாதருள் பெற்ற தீண்டாத் திருமேனி யென்ற திருப்பாணாழ்வாரும், வேளாளர்குல திலகமாகிய மெய்கண்ட தேவரும் இவர்பால் அருளுபதேசம் பெற்ற அந்தணராகிய, அருணந்தி சிவாசாரியரும். செயலில் செய்து காட்டி யறிவுறுத்திப் போந்த அந்த சமரச சன்மார்க்க முனைதோ அம்மார்க்கமே நம் செந்தமிழ் நாட்டில் சைவ வைணவ ஆலயங்களில் ஒளிர்வுறுதல் வேண்டும். அப் பெரியார்களின் அருள் வாக்கினின்றும் தோன்றிய தமிழ்த் தெய்வக மொழிகளே! இறைவன் வழிபாட்டிலும் மிளிர்தல் வேண்டும். தமிழ் மக்கள் இன்னதெனப் பொருள்தெரியா மொழியில் வழிபடுதல் தமிழ் மக்களின் உண்மைக் கடவுளொழுக்கத்தினை மறைத்துக்குன்றச் செய்வதாகும்.

இக்காலத்துத் தமிழர்கள் இவ்வுண்மையை யுணர்ந்து, சமரச சன்மார்க்கத்தை வளர்க்க முந்துவார்களென வேண்டிக்கொள்ளுகின்றேன்.

நம் தமிழ் நாட்டில் தமிழர்களால் தோற்றுவிக்கப்பட்டதும், நமது முற்கூறிய பெரியார்களால் வளர்க்கப்பட்டதுமாகிய சமரச சன்மார்க்க நெறியை வளர்க்க முந்துதல் வேண்டும.

இதனை வளர்ப்பதற்காகவே நம் பண்டைப் பெரியார் பலர் தங்கள் நிறைந்த செல்வ நிதியை மடங்கட்கு விட்டுவைத்து போயுள்ளார்கள். அப்பொருள்கள் இக்காலத்தில் நந்தாய் மொழியாம் தமிழ் மொழியையும், சன்மார்க்க நெறியினையும் வளர்க்க உபயோகப்படாது. வக்கீல்களுக்கும், கோர்ட்டுகளுக்கும் மற்றும் அடாத செயல்களுக்கும் கொடுத்து அழிக்கப்படுவதைக் காண ஒவ்வொரு உண்மைத் தமிழ் மகனும் கண்ணீர் விடத்தக்கனவாயிருக்கின்றன. மேலும் மடாதிபதிகள் சுயநலங்கருதி கடவுணெறியிலும், ஒழுகலாற்றிலும் வேற்றுமையை வளர்க்கும் சிறு கூட்டத்தார்கள் பால் சிக்காது விரிந்த வழியில் நந்தமிழர்களைக்கொண்டு நல்வழிகாட்ட முற்படுவார்களாக.

நம் நாட்டில் ஏற்பட்ட முக்கியமான மூன்றுமடங்களும் ஒருமைப்பட்டு தமிழையும், சன்மார்க்கத்தினையும் வளர்க்கத் தக்க ஓர் தமிழ்க் கல்லூரியையோ தமிழ் சர்வகலாசாலையையோ காண முற்படின், அம் மடங்களின் பெருமையைப் புலப்படுத்துவதாகும். மடங்கள் ஆலய ஆடம்பர விழாவிலும், மற்றைய டாம்பீகச் செயல்களிலும செல்வத்தைக் குறைக்க முந்துதல் வேண்டும். இத்தஞ்சை ஜில்லாவில் முற்கூறிய மூன்று மடங்களும் உள்ளபடியால் அம் மடங்கள் கூடுமானவரையில் குறைந்தது ஐந்நூறு தமிழ்ப்பிள்ளைகளுக்கு வேற்றுமை பாராட்டாது உண்டி உடை கொடுத்து தமிழ்க் கல்வியைப் போதிப்பது சாலச் சிறந்ததொன்றாம். மற்றும், தமிழ் மொழியிலுள்ள பண்டைத் தமிழ் நூல்களையும், உண்மைச் சமயநூல்களையும் அச்சுச்சாலை யமைத்து அச்சுவாகனமேறச்செய்து தமிழர்களுக்கு இலவசமாகவோ, குறைந்த விலைக்கோ, கொடுத்து பரவச் செய்யலாம். இக்காரியங்களில் நம் மடாதிபதிகள் கண்ணோட்டம் செலுத்த வேண்டுகின்றேன்.

இது காறும் சமரச சன்மார்க்க நன்னெறியை வளர்க்கு முறையை என்னறிவிற்

கெட்டியவளவில் கூறுகைக் கூறியுள்ளேன். இன்னொறியில் நமது பார்ப்பனரல்லாத சைவ வைணவத் தமிழ் மக்கள் ஒன்று பட்டுழைக்க முந்துவார்களாக.

இதனை வளர்ப்பவர்கள் பலரிருப்பினும், உண்மைக் குருநாதர்களாக நமக்குவழிகாட்ட திரு. வி. கல்யாணசுந்தர முதலியாரவர்களும், ஈ. வெ. இராமசாமி நாயக்கரவர்களும் களும், பனகாலராசாவர்களும் தோன்றியுள்ளார்கள். இவர்களாதரவால் யாம் கடவுளுரிமை பெறுவதிலும் வெற்றியடையலாமென்பது எனதுநம்பிக்கையாகும். இதற்கு நமது தமிழ் மக்கள் எவ்வித வேற்றுமையுமின்றி ஒத்துழைத்துப் பயன் பெறுவார்களென்று கேட்டுக்கொள்ளுகிறேன். பின்னரும் தலைவரவர்கட்கும் நால் கட்கும் வந்தனம் புரிந்து நல்வரவேற்புக் கூறுகின்றேன்.

## இளைஞர் மகாநாட்டு வரவேற்பு அக்கிராசனர் ஸ்ரீமான் கனகசபை நாடார் செய்த வரவேற்பு உபந்நியாசம்.

*ஆக்கம் அதர்வினாய்ச் செல்லும் அசைவிலா ஊக்கம் உடையான் உழை.*

அன்புமிக்க எனது சகோதர வாலிபவீரர்களே!

எங்களது வேண்டுகோளுக்கிணங்கி இளைஞர் மகாநாட்டிற்கு வந்திருக்கும் உங்களனைவருக்கும் முதன் முதல் எனது மனமுவந்த வணக்கத்தை அறிவித்துக் கொள்ளுகின்றேன்.

இக்காலத்தில் எங்கும் புதிய, புதிய உணர்ச்சிகளும், ஊக்கங்களும் காணப்படுகின்றன. நாமும் அவ்விதத்தில் ஈடுபட்டு மேன்மையடைய வேண்டுமென்றே நமது மாபெருந் தலைவர், திரு. S. B. Y. சுரேந்திரநாத் ஆரியா M. A. அவர்கள் நமது இளைஞர் இயக்கத்தைக் கண்டார். அத்தகைய பெரியாருக்கு நாம் செய்யும் கைமமாறு யாதுளது? அன்னவர் தம் அறிவுரைகளை ஒப்புக்கொண்டு அதன்படி நடப்பதேயாகும்.

இளைஞர்களால் தொடங்கப் பெறும் எந்த இயக்கமும் அதன் நோக்கத்தில் வெற்றியடையுமென்பதில் ஐயமில்லை. இன்று அயர்லாந்து (Irland) எகிப்பது (Egypt) ருஷியா (Russia) துருக்கி (Turky) ஜெர்மனி (Germany) முதலிய நாடுகள் விடுதலை பெற்று சிறப்புடன வாழ்வதற்குக் காரணம் அந்நாட்டு இளைஞர்களே என்பதை சரித்திர ஆசிரியர்களால் அறிகின்றோம். அதுபோல நமது நாடும் விடுதலை பெற்று எல்லாமக்களும் ஒன்றுபட்டு இன்ப வாழ்க்கையிலிருக்க வேண்டுமாயின் அது நம்போன்ற இளைஞர்களால் தாம் முடியுமென்ற உண்மை ஒருவரும் மறத்தல் கூடாது. ஆகவே இளைஞர்களாகிய நாம் செய்பவேண்டிய நாட்டுத் தொண்டு சமூக ஊழியமே யாகும். அரசியலில் ஈடுபட்டுழைப்பது நமது இளைஞர் சங்கத்தின் நோக்கமில்லை. ஏனெனின், தற்காலத்தில் தலைவர்களனைவரும் அரசியற் கொள்கைகளில் ஈடுபட்டுழைக்கின்றார்கள். அவர்களுடைய அரசியற் கொள்கைகள் நிறைவேறுவதற்குரிய அடிப்படையான வேலைகளை நாமே செய்யவேண்டியவர்களாக விருக்கின்றோம். நாட்டிலுள்ள சாதி சமயவேறுபாடுகளையும் அவைகளால் ஏற்பட்ட மூடக்கட்டுப்பாடுகளையும், பொருளற்ற சடங்குகளையும், மன்னமுடியாத கொடுமைகளையும் தொலைத்து ஆண் பிள்ளைகளை ஆளும் பிள்ளைகளாக ஆக்கவேண்டுவதே நமது நோக்கமாகவிருக்கின்றது. ஆதலால் அரசியலில் ஈடுபட்டு ஒருவரையொருவர் கலகம் விளைத்துக்கொண்டிருக்கும் எல்லாத் தலைவர்களின் உதவியையும் இளைஞர்களாகிய நாம் நாடுகின்றோம். அவர்களும் நமக்கு உதவி செய்வார்களென்று நம்புகிறேன்.

பெரியோர்களிடம் நான் வேண்டிக்கொள்வதொன்றுண்டு. பெரியோர்களே! நீங்கள் பொது நலத்தில் ஈடுபட்டுழைக்காவிட்டாலும் உங்கள் பிள்ளைகள் செய்யும் வேலையைத் தடை செய்யாதீர்கள். நீங்கள் இதுவரையிலும் கடைப்பிடித்து ஒழுகி வந்த குருட்டுக் கொள்கைகளை அவர்களுக்குப் போதிக்காதீர்கள் காலச் சக்கரம் சுழன்று கொண்டிருக்கும்போது குருட்டு-மூட-வைதிக-புரோகித பார்ப்பனியக்கொடுமைகளில் இனி உங்கள் பிள்ளைகள் ஈடுபடப்போவதில்லை. ஆயினும் நீங்கள் அவர்களுக்கு உதவி செய்யா விட்டாலும், தடைசெய்யாமலிருக்க வேண்டிக் கொள்ளுகிறேன்.

அன்புள்ள சகோதரர்களே!


அசைவிலா ஊக்கமுடனும், அஞ்சாமையுடனும் இடைவிடாது உழைத்து நமது சமூகத்தை முன்னேற்ற முயல்வோமாக. பள்ளிக்கூட மாணவர்களான இளைஞர்களும், நம்முடன் ஈடுபட்டு நகரங்கள் தோறும், கிராமங்கள்தோறும் நமது நோக்கத்தை நிறைவேற்ற முயல்வோமாக. நாம் செய்பவேண்டிய காரியங்களையும், அவற்றிற்குரிய வழிகளையும் உணர்த்துமாறு தலைவர்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

சகோதர வாலிபச் சிங்கங்களே!

இன்று நாம் பல பெருந்தலைவர்களின் அறிவுரைகளைக் கேட்க வேண்டியிருப்பதால் எனது சொற்களை இவ்வளவோடு நிறுத்திக் கொள்ளுகின்றேன். இளைஞர் இயக்கத்தில் ஊக்கமெடுத்துக் கொண்டிருக்கும் உங்களனைவருக்கும் மீண்டுமொருமுறை எனது வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

சமூக ஊழியம் வளர்க.


## வ்கௌட்வ் கேமரா.



சமீபத்தில் லண்டனில் கண்டு பிடிக்கப்பட்டது. இதைக் கொண்டு சிறு குழந்தைகள் கூட புகைப்படமெடுத்து மாதம் 50 முதல் ரூ. 1,000 வரை சம்பாதிக்கலாம். அதன் ரஹஸ்ய முறைகள் கேமரா வாங்குபவர்களுக்கு தெரிவிக்கப்படும்

இதன் விலை செட் 1-க்கு ரூ. 3—8—0.

கிடைக்குமிடம்:—

Hart & Co.,
Importers, Coimbatore, (S. I.)


## நோட்டீஸ்.

இதனால் சகலமானவர்களுக்கும் தெரிவிப்பதென்னவென்றால் என் குமாரன் ஆறுமுகம் செட்டி என்பவன் வைப்பு ஸ்திரீ முதலானது வைத்துக்கொண்டும் குடி முதலானதுகள் வைத்துக் கொண்டும் துன்மார்க்கமான நடத்தையில் நடந்து கொண்டு வருகிறான். மேற்படி துன்மார்க்க செலவுகளுக்காகவும், குடி வைப்பு இவைகளுக்குள் மட்டும், மேற்படி ஆறுமுகம் செட்டி சொல்ப தொகைகள் வாங்கிக்கொண்டும் சிலவைகளில் யாதொரு தொகையும் வாங்கிக் கொள்ளாமலும் அதிக தொகைகளுக்குக் கடன் பத்திரங்கள் எழுதிக் கொடுத்துக் கொண்டிருப்பதாகவும், கடைகளில் பற்றுவழி கணக்குகள் ஏற்படுத்திக் கொண்டிருப்பதாகவும் தெரியவருகிறது. மேற்படி ஆறுமுகம் செட்டி ரிஜிஸ்டர் விடுதலைப் பத்திரம் எழுதிக்கொடுத்து விட்டு குடும்பத்தை விட்டு விலகி பிரத்தியேகமாய் இருந்து வருகிறான். அவனுக்கு ஒருவரும் கடன் கொடுக்கக் கூடாது. மேற்படியானுக்குக் கொடுத்திருக்கிற கடன்களுக்கும், இனி ஏதாவது ஏற்படும் கடன்களுக்கும் எந்த விதத்திலும் நானும் எனது சொத்துகளும் கட்டுப்பட்டவை இல்லை சொத்துகள் பூராவும் என்னுடைய சுயார்ஜிதம். வேறு ஒரு வருக்கும அதில் பாத்தியமில்லை.

அ. வெங்கிடசாமி செட்டியார்,
வங்கபட்டி.

௬ம் பக்கத் தொடர்ச்சி.

மலையாளத்தில் அன்னியமதத்தில் அநேகர் சேர்ந்து விட்டார்கள். மதச்சச்சரவு ஏற்படுகையில் அன்னிய மத வைராக்கியமும் நாம் முன் செய்திருக்கும் கொடுமையும் இரண்டுஞ் சேர்ந்து, நம்மை ஊரைவிட்டு ஓடச் செய்து வெள்ளைக்காரன் காலில் விழச்செய்கிறது. மாப்பிள்ளை என்னும் மகம்மதியர் கலகத்தை ராஜாங்கத்தார் தடுக்காவிட்டால் மலையாளம் மட்டுமல்ல தமிழ் நாடும் என்ன பாடுபட்டிருக்குமென்பது ஆலோசித்தால் விளங்கும். குருஸ்தானங்களும் அதைச் சுற்றியிருக்கும் வயிறு பெருத்தவர்களும், நானும் சாது ஜனங்களையும், கோவிலையும், காப்பாற்ற எப்படி முடியும்? தடுக்கச் சக்தியுடையவர்களெல்லாம் அன்னிய மதத்திற் சேர்ந்து கொள்ளுகிறார்கள் என்று சொல்லப்படுபவர் தாழ்ந்த ஜாதியார்களே மத வைராக்கியமும் துணிவுமுடையவர்கள் நம் கொடுமை இப்படியே இருந்தால், இவர்களெல்லாம் அன்னியமதத்தில் சேர்ந்து விடுவார்கள். இதற் கெல்லாம் காரணமான பிராமணன் திருத்தமடைய வேண்டுமென்று "குடி அரசு" சொன்னால் கோபப்படுகிறார்கள். எப்ரல் ஒன்பதாம் தேதி அரித்துவாரம் இந்துமகா சபைஸ்பெஷல் மீட்டிங்கில் மாளவியாவிற்குப் பதிலாக சபா நாயகராக விருந்து பண்டிதர் தேவாத்தின அவர்கள் செய்த பிரசங்கத்தில், பிராமணர்களால் இந்து மதம் க்ஷீணித்துப் போகிறது" என்றார். இப்பேர்ப்பட்ட படித்த மேதாவிகளின் வாக்கையும், அனுபோகத்தையும், கவனித்தாகிலும் இப்போதைய சங்கராச்சாரியார் என்னப்படுபவர்கள் அந்நிய மதத்திற்கு நமது சகோதரர்களான தாழ்ந்த ஜாதியாரென்னப்படுபவரைக் கொண்டு போய் தள்ளும் நம் "மத"க் கொடுமைகளை தீர்த்துத் தான் வாங்கும் பணத்தை நல்ல வழிகளில் எல்லோருக்கும் பொதுவாக உபயோகப்படும்படிச் செலவுசெய்து ஆதி சங்கருடைய பெயரைக் காப்பாற்றுவார்களாக

(2ம் பக்கத் தொடர்ச்சி.)

மிக அக்கரையுள்ளவர்களைப் போல் பாவனை செய்த பிராமணர்கள், 'இல்லை இல்லை இந்த நஷ்ட ஈட்டுப்பணத்தையெல்லாம் எங்களிடம் கொடுங்கள். நாங்கள் நேராக இறந்தவர்களிடமே அனுப்பி விடுகிறோம்'' என்று சொன்னார்கள்! (பெருத்த நகைப்பும் கை தட்டலும்) சகோதரர்களே! அதை சிவாஜி மகாராஜா நம்பி அப்படியே அந்தநஷ்டஈட்டையெல்லாம் அப்பார்ப்பனர்களிடமே கொடுத்துவிட்டார்! (நகைப்பு) இத்தகைய வகைத்தான் சகோதரர்களே, நம் பிராமண சகோதரர்களான பீஷ்வாக்கள் மோசஞ் செய்தார்கள்!

இவைமட்டுமின்றிசிவாஜிஒவ்வொரு'போருக்கும் புறப்படும் போதும் யுத்தத்தினின்று மீண்டும் வரும்போதும் பிராமணர்களால் சடங்குகள் நடந்தே தீரவேண்டும் பிராமணர் சொல்படி நடக்கும் பொம்மையாய் சிவாஜி மகாராஜா இருந்து வந்தார். எடுத்ததற்கெல்லாம் சடங்கு. எடுத்ததற்கெல்லாம் தாகு! எடுத்ததற்கெல்லாம் தட்சனை! இவற்றிற் கெல்லாம சிவாஜி மகாராஜா கீழ்ப்படிந்தே நடந்து வந்தார். ஆனால் ஒவ்வொரு வேளைகளில் பார்ப்பனப் பித்தலாட்டங்களை மகாராஜா அவர்கள் கண்டித்தார். அப்பொழுதெல்லாம் பார்ப்பனர்கள் அவரை ஒழிக்க உத்தேசித்தார்கள். போருக்குரிய தட்டி ஜல்லடம் வீரமணி வீரவான் முதலிய புனைந்து குதிரையேறிப் போர் முனைக்குப் புறப்படும் போது பார்ப்பனர்கள் சடங்கு பிரஸ்தாபம் செய்வார்கள். ஆனால் சுத்த வீரரான சிவாஜிக்கு அப்பொழுதுதான் உண்மை க்ஷத்திரிய இரத்தம், போர் வீர இரத்தம், கொதிக்க ஆரம்பித்து விடும்! பார்ப்பனப் பித்தலாட்டங்களின் மோசங்களையும் அர்த்தமில்லாத சடங்குகளையும் அப்பொழுது தான் சற்று ஊன்றிக் கவனிப்பார். "அப்பாலே போங்கள்! அர்த்தமில்லாத சடங்குகள் என் வெற்றியைத் தடை செய்யாதிருப்பதாக'' என்று சொல்லி வீர முழக்கம் செய்து கொண்டு வாளைமாலை சூட்டிப்போர் முனைக்குப் பறந்து விடுவார். இத்தகைய சிவாஜியின் அடாத செயல்களுக்காகப் பார்ப்பனர்கள் 'அவரை ஒழிக்க முயற்சி செய்யலானார்கள் தங்களை சிவாஜி சட்டை செய்யவில்லையாம்!' (நகைப்பு)

மற்றும் சகோதரர்களே, பார்ப்பனர்களுக்குத்தான் சிவாஜி மகாராஜா தன் சேனைகளில தளகர்த்தர் உத்தியோகங்களையும் தன் இராஜ்ஜியத்தில் மந்திரி உத்தியோகங்களையும் இன்னும் பெரிய பெரிய உத்தியோகங்களையுங் கொடுத்து வந்தார். பார்ப்பனரல்லாதார்களை கவனிக்கவே கிடையாது. சிவாஜி மகாராஜாவுக்கு இரண்டு குருமார்களிருந்தனர். அவர்கள் துக்காராம், ராம்தாஸ் ஆகியவர்களே. துக்காராம் பார்ப்பனரல்லாதார், ராம்தாஸ் பார்ப்பனர். இருவரும் பெரிய பண்டிதர்களே இவர்கள் இருவருடைய உபதேசமும் 2 வகைப்படும். ஒன்று சிவாஜி மகாராஜாவுக்கு சுயமதிப்பையும் வீரத்தையும் ஊட்டுவதாக விருந்தது. மற்றொருவரின் உபதேசம் பார்ப்பனர்களைப் பூஜிக்கச் செய்வதாயிருந்தது!

## சர்க்கார் உத்தரவு

மந்திரிமார்களுக்கு ஸ்தல ஸ்தாபனங்களால் வரவேற்று உபசரிப்பதனால் ஏற்படும் செலவுகளை சர்க்காரால் அங்கீகரிக்கப்பட மாட்டாது என முன்னமே தெரிவிக்கப்பட்டிருக்கிறது. உபசாரப் பத்திரங்களை வெள்ளிப்பெட்டிகள் பொது ஸ்தாபனங்களின் பணம் அல்லாத வேறெவ்வகையாயினும் வெள்ளிப்பெட்டிகளில் வைத்துக் கொடுக்கக்கூடாதென மந்திரிமார்கள் விரும்புகின்றார்கள் என்பதை ஸ்தல ஸ்தாபனங்களுக்கும் முனிசிபாலிட்டிகளுக்கும் இனியும் தெரிவித்துக்கொள்ளுகிறோமென சர்க்கார் காரியதரிசி அறிவிக்கிறார்.

---

காங்கிரஸ் புரட்டினால்
யாரும் ஏமாரவில்லை.
ஜஸ்டிஸ் கட்சியின் பெரும் வெற்றி.

திருவள்ளூர் தாலூகா போர்டில் பொன்னேரி சர்கிலுக்கு ஏப்ரல் மாதம் 15-தேதி தேர்தல் நடந்து 19-தேதி முடிவு அறிவிக்கப்பட்டது. ஜஸ்டிஸ் கட்சியின் சார்பாக ஸ்ரீமான் அரசூர் ஜமீன்தார் நாட்டு நடேச முதலியார் அவர்கள் நின்றார். காங்கிரஸ் கட்சியின் சார்பாக ஸ்ரீமான் ஷாக்காடு ஜமீன்தார் வாதப்ப நாயுடு அவர்களும் நின்றார். திருவயர்பாடி ஸ்ரீமான் இராமசந்திர அய்யர் அவர்கள் நின்றார். காங்கிரஸ் அபேக்ஷகருக்கு சென்னை சட்டசபை, மெம்பர் ஸ்ரீமான் முத்துரங்க முதலியார் அவர்களும் இன்னும் காங்கிரஸ் பிரமுகர்களும் பலமாக பிரசாரம் செய்தார்கள் காங்கிரஸ் காரர் செய்த பிரசாரத்திற்கு அளவேயில்லை. ஓட்டர்கள் காங்கிரஸ் காரர்கள் செய்த போலி பிரசாரத்திற்கு மயங்காமல் ஓட்டு செய்தார்கள். முடிவில் ஜஸ்டிஸ் அபேக்ஷகரான ஸ்ரீமான் அரசூர் ஜமீன்தார் நாட்டு நடேச முதலியாருக்கு 656 ஓட்டுகளும், காங்கிரஸ் அபேக்ஷகரான ஸ்ரீமான் ஓக்காடு ஜமீன்தார் வாதப்ப நாயுடுவுக்கு 288 ஓட்டுகளும் ஸ்ரீமான் இராமசந்திர ஐயருக்கு 3 ஓட்டுகளும் கிடைத்தன. முடிவாக ஜஸ்டிஸ் அபேக்ஷகரான ஸ்ரீமான் அரசூர் நாட்டு நடேச முதலியார் வெற்றி பெற்றார்.

---

திருஞானசம்பந்தர் குருபூஜை 9வது ஆண்டு விழா:—திருவெஞ்சாமக்கூடலூரில் கரூர் தாலூகா பிச்சம்பட்டி கிராமம் ஆலமரத்துப்பட்டி சைவர்களால் வைகாசி-மீ 6-உ கொண்டாடப்படும். அவ்வமயம் ஸ்ரீமான் சுவாமி நேச சுவாமி அவர்களின் அக்கிராசனத்தின்கீழ் ஸ்ரீமான்கள் லாலாபேட்டை தி. மு. முத்துசாமி பிள்ளை அவர்களாலும் முசிரி சொக்கலிங்கஞ் செட்டியார் அவர்களும் முறையே திருஞானசம் பந்தர் கொல்லாமை, என்னும் பொருள்பற்றி பேசுவார்களென்று ஒரு நிருபர் அறிவிக்கிறார்.


## மதனகல்ப லேகியம்.

மலக்கட்டு, பசியின்மை, துரிதஸ்கலிதம் சொப்பனஸ்கலிதம் முதலியவற்றைக் குணப்படுத்தி இந்திரியத்தைக் கட்டுவதில் சிறந்த ருசியா சித்தரசாயனம், விலை சேர் 1க்கு ரூ. 2 வி. பி. வேறு

ஆனந்த நிலையம், திருச்செங்கோடு (S. I.)


## பார்ப்பனீயத்தைத் தொலைக்கும்வழி

---

கட்டுரைக்காணும். கனவான்களே;

ஆற்றல் அற்ற அறியாச்சிறுவன் தங்கள் பால் ஆவலுறும் ஆர்வம் ஒன்றுளாது. அது என்னவெனில்.—

பார்ப்பனீயக் கொடுமையைத் தொலைக்கவேண்டுமென்று பாடுபடும் அருந்தமிழர்களாகிய நாமும் பார்ப்பன ஆதிக்கத்திற்குப்பிறப்பிடமாகியப் பேச்சற்ற ஊமைப் பாடையை பாடையிலேற்றப் பாடுபட வேண்டுமெனகேட்டுக் கொள்ளுகிறேன் கட்டுரைகளெல்லாம் அன்னை மொழியிலே ஆர்வம் பெறச் செய்வதை கடமையெனக் கொள்ளவேண்டும் தனித்தமிழ்மறையை வடமொழியானது நிலைபெற அநேக நூற்களைப்புரட்டுகின்றன. ஆன்றோர் தமிழ்உன்னதம் பெற்றநாளில் வட மொழி ஆதிக்கம் எங்கொளித்திருந்தன வென்பதை கவனிக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறேன். ஆனபடியால் நம தன்னையாந் தமிழ்த் தாய் இன்னலுறாமல் இன்புறச், சீரிய சிங்காதன மேற்ற தமிழ்ப் புலவர்கள் உலகவழக்கில் அற்று எழுத்தளவில் நிற்கும் ஊமைப்பாடையை தங்களால் காணப்படும் கட்டுரைகளிலும், சொற்பெருக்குகளிலும், கூடுமான வரையில் நீக்கி, இன்பந்ததும்பும், இசையுள்ளத்தராகத்தாய் மொழியை உபயோகப்படுத்த ஆவலுறவேண்டும். நம் தமிழன்னை யானவள் வீறுகொள்வாளேயானால் புரோகிதத் தன்மையும், பார்ப்பனக் கொடுமையும் தமிழர்களை விட்டுத் தானே விலகுமென அடியேன் அறிவிக்கின்றேன்.


எஸ். கே. கோவிந்தராஜ நாயகர்,
வினையாற்றுவோன்

---

பார்ப்பனீயப் புரோகிதம் ஒழிந்தது:—நாகை சுப்பையா பிள்ளை சந்திலிருக்கும் ஸ்ரீமதி சுப்பம்மாள் அவர்கள் தன் கணவனுடைய வருடாந்திரத் திதியை பார்ப்பனப் புரோகிதர்களின்றியில் நடாத்தியதோடு சுற்றத்தவர்களுக்கும் ஏழைகளுக்கும் விருந்திட்டுபசரித்தார்களென ஒரு நிருபர் அறிவிக்கிறார்.


இனம்! இனம்

முனையில் இரிடியம் உள்ள 14 Kt.
தங்க நிப்பு போட்ட Self-filling
பௌண்டன்பேனா இனம்.



எங்கள் 18 காரட் ரோல்டு கோல்டு பின்புரம் விசித்திர வேலை செய்யப்பட்ட லீவர் பாக்கெட் கெடியாரம் வாங்குகிறவர்களுக்கு மேலேசொல்லியபடி பௌண்டன் பேனாஇனமாய் அனுப்பப்படும். கடியாரம் விலை ரூ. 4-12-0. 5வருஷம் உத்தரவாதம். உடனே எழுதுங்கள்.

CANADIAN WATCH PEOPLE,
George Town, Madras.



## சர்வமேக சம்ஹாரி.

சகல வெள்ளை, வெட்டை, நீர்க்கடுப்பு, தடிப்பு, முதலிய மேகம் இருபத்தொன்றையும் ஒரு வாரத்தில் குணப்படுத்தும். ஒரு வார மருந்து விலை ரூ 2. வி. பி: வேறு கேட்லாக் இனாம்:

ஆனந்த நிலையம் திருச்செங்கோடு. (S. I.)

## குடி நூல்.


அகில பாரத சர்க்கா சங்கத்தின் தமிழ் நாட்டுக் கிளையாரால் மாதம் இருமுறை கதரைப்பற்றி மாத்திரம் எழுதப்பட்டுப் பிரசுரிக்கப்படும். எட்டுப் பக்கங்களடங்கிய கதர்ப்பத்திரிகை.

ஏழை மக்களும் படிக்கவேண்டும் என்ற எண்ணத்தோடு வருட சந்தா ரூபாய் ஒன்று அல்லது 8000 கஜம் கைநூல் என்று நிர்மாணித்திருக்கிறது.

சந்தாவை முன்னதாகவே அனுப்பவேண்டும். வி. பி. யில் அனுப்புவதில்லை. இதை எல்லோரும் ஆதரிக்கவேண்டுமாய்க் கோருகிறோம்.

மானேஜர்,
சர்க்கா சங்கம், ஈரோடு.

## நூதன ஜர்மன் எலக்டிரிக் விளக்கு.



இதை மேஜையின் பேரிலும், சுவற்றிலும், வைக்கலாம். இராத்திரியில் படுக்கையிலிருந்தபடியே விளக்கை இதில் கண்ட கயிற்றின் (wire) உதவியால் எரியவும் நிறுத்தவும் செய்யலாம். புயற்காற்று அடித்தாலும் எரியும். பிரகாசம் கண்ணைப்பறித்துக் கொண்டு போகக்கூடியது. விசேஷ காலங்களில் வைத்தால் ஜனங்கள் அதிசயத்தைப்பார்க்கக் கும்பலாகக் கூடிவிடுவார்கள். மிக ஜாக்கிரதையாக பாக்கிங் செய்தனுப்பப்படும். குறைந்த விலை ரூ. 4—8—0 தபால் செலவு 0—8—0.

பாரீஸ் எம்போரியம், ஜி. டி.
மதராஸ்.

## அறிவிப்பு.


நமது சந்தா நேயர்கள் தங்களுக்குப் பத்திரிகை சரிவர கிடைப்பதில்லையென்று அடிக்கடி நமக்கு கடிதம் எழுதிவருகிறார்கள். ஆனால் நாம் அவைகளைக் கவனிக்குங்காலத்தில் அன்னார்களுக்குப் பத்திரிகை கிரமமாகத்தான் அனுப்பப்பட்டு வருகின்றன. நாங்களும் ஆபீசில் ஒரு தடவைக்கு மூன்று தடவை விலாசங்களை கணக்கிட்டு சரிபார்த்து அனுப்பிவருகிறோம். ஒருகால் மேற்படி சந்தா நேயர்களின் பத்திரிகைகளை அன்னார்களின் சிநேகிதர்களோ மற்றும் பந்துக்களோ பெற்றுக்கொண்டுதிருப்பிக்கொடுக்காமலிருக்கலாமோவெனச் சந்தேகிக்கவேண்டியிருக்கிறது. சந்தா நேயர்கள்தயவுசெய்து இனிமேல்எங்களுக்குக் கடிதம் எழுதினாலும், சந்தாத் தொகையை மணியாடர் மூலம் அனுப்பினாலும் முழு விலாசத்தை விபரமாய் எழுதுவதுடன் சந்தா நெம்பரையும் குறித்தெழுதுமாறு கேட்டுக்கொள்ளுகிறோம்.

மானேஜர், "குடி அரசு" ஆபீஸ்.

## திருப்பூர் கத்தர் பனியன்கள்.

கைராட்டின நூலிலேயே தயார் செய்யப்பட்டது

விலை நயமானது — Trade Mark — சரக்குமேலானது



28 இஞ்சு டஜன்1க்கு 7--14—9
30 „ 8—4—0
32 இஞ்சு டஜன் 1க்கு 8—10—0
34 „ 9—0—0

Registeder.

உங்களுக்கு வேண்டியசுத்தக்கதர் பனியன்களுக்கு எங்களுக்கே ஆர்டர் செய்யுங்கள். ஒவ்வொரு பனியன்களிலும் கைராட்டினம் அடையாளம் இருக்கிறதா வென்று கவனித்து வாங்கவும்.

M. V. கருப்பண்ண செட்டியார்,
கத்தர் பனியன் வொர்க்ஸ், திருப்பூர். (தென் இந்தியா)

## தாய்மார்கள் கவனிக்கவேண்டியது.

சில தாய்மார்களுக்கு பலவித காரணங்களால் பால் சுருங்கி சிசுக்கள் தவிப்பதை நிவர்த்தி செய்து பால் வளரும்படி செய்ய நம்மால் ஒரு தேங்காய் ஜெபித்து வி. பி. செய்யப்பட்டுவருகிறது. 20 வருடத்து அனுபவம், எம்மதஸ்தாரும் வாங்கலாம், அனுபவிக்கும் விதம் தேங்காயுடன் அனுப்பிவைக்கப்படும் இதன் விலை தபால் செலவின்றி ரூ. 1—4—0 மாத்திரம்.

குறிப்பு:—காத்துக்கருப்பு விஷயத்திற்கும் தேக சம்மந்தப்பட்ட வியாதிகளுக்கும், மந்திரத்தாலும் மருந்தாலும் சிகிச்சை செய்யப்படும்.

விலாசம்:— எ. எஸ். எ. மாந்திரீக டாக்டர்
இறும்தார் வீடு,
சின்னகடைத்தெரு, தெப்பகுளம், திருச்சி.

## திருப்பூர் சுத்த கதர் ஜவுளிகள்.

பலரகம் வேஷ்டிகள், துண்டுகள், வெள்ளை பீஸ் ரகங்கள், ஷர்ட்டிங், கோட்டிங், சீட்டி தினுசுகள், தாவணிகள், சுங்கடி சேலைகள் இன்னும் அநேக தினுசுகள் எங்களிடத்தில் கிடைக்கும். தேவைக்கு ஆர்டர் செய்யுங்கள். வி. பி. அனுப்ப முடியாத வெளிநாடுகளுக்கு பூராத் தொகையையும் முன் பணமாக அனுப்பவேண்டும்.


(அத்தாட்சி பத்திரம்.)

ஸ்ரீமான் ஆர். எம். எஸ். சிதம்பரம் செட்டியார், முத்துசாமி செட்டியார் கைநூலால் கைத்தறியால் தயார்செய்யப்பட்ட சுத்த கத்தர் துணிகளையே உற்பத்திசெய்து நியாயமான விலைக்கு விற்றுவருகிறார்.

S. இராமநாதன்: காரியதரிசி, கத்தர்இலாகா

விலாசம்:—

ஆர். எம். எஸ் சிதம்பரம் செட்டியார்,
முத்துசாமி செட்டியார்,
கத்தர் டிப்போ, திருப்பூர். (தென் இந்தியா)



### பெட்ரோமாக்ஸ் லைட்.

லைட்கள், மாண்டில், டூம், தனித் தனி சாமான்யாவும் விலைநயமாய் கிடைக்கும். கியாட்லாக் இனும்.

ஸன் கம்பெனி, தஞ்சாவூர்.

### நமது அச்சுக்கூடத்தில்

பலதிறப்பட்ட ஜாப் வேலைகள் அழகாகக் குறித்த காலத்தில் செய்துதரப்படும்

மானேஜர்:—
உண்மை விளக்கம் பிரஸ், ஈரோடு.

## மூன்று மாதத்தில் மோட்டார் ஓட்ட கற்றுக் கொள்ளலாம்

1916ஹு ஸ்தாபிக்கப்பட்டது.

எங்கள் கம்பெனியில் மோட்டார் வண்டிகளை ஓட்டவும், பிரிக்கவும், பூட்டவும் வேறு பல சிர் திருத்தங்கள் செய்யவும் கற்றுக் கொடுக்கப்படும். தேர்ச்சியடைய மூன்று மாதம் ஆகும் தேர்ச்சி அடைந்த பின்பு கவர்ன்மெண்டு லைசென்சும் எமது கம்பெனி சர்டிபிக்கேட்டும் கொடுக்கப்படும்.

மற்ற விபரத்திற்கு நேரில் எழுதி தெரிந்துகொள்ளலாம்.

மதருஸ் தென்னிந்தியா
மோட்டார் இன்சினியரிங் ஒர்க்ஸ்,
மைலாப்பூர்-மதருஸ்.

## தமிழ் புக்கீப்பிங்.

விலை ரூபாய் 1.

கணக்கு வைக்கும் முறையை நன்கு போதிப்பது. ஒற்றைப் பதிவு, இரட்டைப் பதிவு இரண்டு பாகங்களுமடங்கி இருக்கின்றன. அநேக வியாபார இரகசியங்களையு முடையது. வியாபாரிகள், மாணவர்கள், கம்பெனி உத்தியோகஸ்தர்கள் எல்லோருக்கும் அவசியம்.

தே. ஆறுமுக செட்டி,
முதலியார் பேட்டை, புதுச்சேரி

நல்ல சமயம்! நல்ல சமயம்!!

தற்கால நாகரீகத்திற்கேற்ற வியாபார நடை, தொழில் நடைகளுக்கு அத்தியாவசியமான ஆங்கிலம் கற்கவேண்டுமா?

தபால் மூலம்
ஐந்தே மாதம் ஐந்தே ரூபாய்

கடந்த 7 வருஷகாலமாய் நேரில் ரூ 25க்கு கற்றுக் கொடுக்கப்பட்ட 5 மாத இங்கிலீஷ் கோர்ஸை இப்போது தபால்மூலம் தமிழ் தெரிந்த எவரும் ரூ 5 க்குக் கற்றுக்கொள்ளலாம். அநேக வியாபாரிகளும், கல்வி இலாகாத் தலைவர்களும் நற்சாட்சி பத்திரங்கள் அளித்திருக்கிறார்கள். பிராஸ்பக்டெஸுக்கு உடனே எழுதுங்கள்.

பிரின்சிபல்
காம்பிரிட்ஜ் இன்ஸ்டிடியூட், நாகூர்.

ஸ்ரீமதி நாகம்மாளவர்களால், ஈரோடு "உண்மை விளக்கம்" பதிப்பகத்தில் பதிப்பிக்கப்பெற்று வெளியிடப்பட்டது.